பக்கங்கள்:-21

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | மாசி 09 | வியாழக்கிழமை | 22.02.2024 | அதிர்வு 205

## சந்திரிகா – மைத்திரி இணைவு இழுபறியில்

முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா அம்மையார், மைத்திரிபால சிறிசேன ஆகியோர் ஒன்றிணையும் செயற்பாடு தொடர்ந்தும் இழுபறியில் உள்ளது.

தான் ஜனாதிபதி வேட்பாளராகக் 06



# தேர்தலை எப்படி நிறுத்தலாம்? இப்படி யோசிக்கின்றது அரசு

### டலஸ் பகிரங்கக் குற்றச்சாட்டு

“ரணில் அரசுக்குத் தேர்தலை நடத்துவதற்கு விருப்பம் இல்லை. இந்த அரசு தேர்தல் அச்சத்தில் உள்ளது. எப்படித் தேர்தலை நிறுத்தலாம் என்று ரணில் அரசு யோசிக்கின்றது.”

- இவ்வாறு சுதந்திர மக்கள் சபையின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

தென்னிலங்கை ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

06

# பேசிப் பேசியே கொல்கின்றார் மலையக அமைச்சர்! நண்பன் ஆறுமுகத்தின் ஆன்மாவும் அழுகின்றது!!

### சபையில் ஜீவனைப் போட்டுத் தாக்கிய மனோ



“பொய், பித்தலாட்டம் பேசுகின்ற மலையக அமைச்சரின் (ஜீவன் தொண்டமான்) நடத்தை கண்டு, எனது நண்பன் ஆறுமுகன் தொண்டமானின் ஆன்மாதான் அழுகின்றது. அதுதான் உண்மை.”

– இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

06



# ஜனாதிபதித் தேர்தல் ஒக்டோபரில் நிச்சயம்

### நீதி அமைச்சர் அறிவிப்பு



“நிறைவேற்று அதிகார ஜனா திபதி முறைமையை நீக்குவது தொடர்பில் அரச தரப்பில் இருந்து எந்தவொரு யோசனையும் முன் வைக்கப்பட வில்லை. தற்போது அதனை செய்வ தற்கான 06




நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் என்பது ஒட்டு மொத்த நாட்டுக்குமானது. எல்லா மக்களினதும் பிரதிநிதித்துவமும் பங்களிப்பும் கருத்துக்களும் அங்கு பிரதிபலிக்கப்பட வேண்டும்.

அந்தவகையில்இந்த நாட்டின் ‘குடிமக்கள்’ பற்றிய பிரச்சினைகளையும் ஒரு பிரதிநிதி அங்கு, அந்த உயர் சபையில், கவலையுடன் – மிகுந்த கரிசனையுடன் – எடுத்துரைத்திருக்கின்றார். அது கவனிக்கத்தக்கது. 06

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally

# இலங்கையின் பொருளாதார நெருக்கடிகளை இந்தியாவுக்கு சாதகமாக்குவதை ஏற்கமுடியாது

## சரத் வீரசேகர எம்.பி. கூறுகிறார்



நாட்டின் முக்கிய கேந்திர மையங்களான துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்களை இந்திய நிறுவனங்களுக்கு வழங்குவது தேசிய பாதுகாப்புக்கு நேரடித் தாக்கங்களை ஏற்படுத்தும். பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு என்று குறிப்பிட்டுக் கொண்டு இந்தியாவுக்குச் சாதகமாக செயற்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.”

– இவ்வாறு ஆளும் தரப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற நாட்டின் தற்போதைய நிலைவரம் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“பொருளாதார நெருக்கடியில் இருந்து நாடு தற்போது சற்று மீண்டுள்ளது என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். அத்துடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் செயற்பாடுகள் வெற்றி பெற்றுள்ளன என்பதையும், மக்களுக்கு பெரும் தடையாக இருந்த போராட்டங்களை முடிவுக்கு கொண்டு வந்தமையையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

பொருளாதார நெருக்கடிக்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு இந்தியாவுக்கு சாதகமான செயற்பாடுகளை முன்னெடுப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. இந்தியாவின் ரூபாவை இலங்கையில் பாவிப்பதற்கும், இந்தியாவின் 29 ஆவது மாநிலமாக அடையாளப்படுத்துவதற்கும் எடுக்கும் செயற்பாடுகளுக்கு நாங்கள் ஒருபோதும் ஆதரவு வழங்க போவதில்லை. கடும் எதிர்ப்பை வெளிப்படுத்துவோம்.

நாட்டின் முக்கிய கேந்திர மையங்களாக உள்ள விமான நிலையம் மற்றும் துறைமுகங்களை இந்திய நிறுவனங்களுக்கு வழங்குவதால் நாட்டின் தேசிய பாதிப்பு நேரடியான அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் என்பதை வெளிப்படையாக குறிப்பிட வேண்டும்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான எட்கா ஒப்பந்தம் கைச்சாத்திட விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. இந்தியாவில் 44 இலட்சம் பேர் தொழில் வாய்ப்பில்லாமல் இருக்கிறார்கள்.

அதேபோல், 2 லட்சம் வைத்தியர்களும் , 15 லட்சம் பொறியியலாளர்களும் தொழில் இல்லாமல் இருக்கிறார்கள். எட்கா ஒப்பந்தத்தை கைச்சாத்திட்டு இவர்களுக்கு இலங்கையின் தொழிற்றுறைகளை வழங்கினால் இலங்கையின் இளைஞர், யுவதிகளின் நிலை என்னவாகும்?

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைக்கு அமைய அரசாங்கம் செயற்படுகிறது. ஆகவே மாற்றீடு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

பிரிக்ஸ் அமைப்புடன் ஒன்றிணைவது குறித்து அரசாங்கம் விசேட கவனம் செலுத்த வேண்டும். பொருளாதார நெருக்கடிக்கு கோட்டபய ராஜபக்ஷவின் அரசாங்கம் பொறுப்புக் கூற வேண்டும் என்று குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் தான் பொருளாதார நெருக்கடி ஆரம்பமானது.”– என்றார்.






# இலங்கையர்களாக ஒன்றுபட்டால் நாட்டை அபிவிருத்தி செய்யலாம்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

"அனைவரும் இலங்கையர்களாக ஒன்றுபட்டால் நாட்டை துரித அபிவிருத்திக்கு இட்டுச் செல்ல முடியும். அதனால் எதிர்கால சந்ததியினருக்கு மிகவும் பாதுகாப்பான நாட்டை கட்டியெழுப்ப முடியும்."

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

திருகோணமலை கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மைதானத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 10 ஆவது தேசிய சாரணர்



ஜம்போரியை நேற்று ஆரம்பித்து வைத்து ஆற்றிய உரையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை சாரணர இயக்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 10 ஆவது தேசிய சாரணர் ஜம்போரி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் திறந்து வைக்கப்பட்டது.

மாற்றத்துக்கான தலைமைத்துவம் என்ற தொனிப் பொருளின் கீழ் பெப்ரவரி 20 ஆம் திகதியிலிருந்து 26 ஆம் திகதி வரையில் நடைபெறவிருக்கும் தேசிய சாரணர் ஜம்போரியில் 11,500 உள்நாட்டு, வெளிநாட்டு சாரணர்கள்




பங்குபற்றினர். இம்முறை பெண்கள் சாரணர்களை பிரதிநிதித்துவப்படும் குழுவொன்றும் உள்வாங்கப்பட்டிருப்பதோடு, சிறுவர் சாரணர்களுக்கும் வாய்ப்பளிக்கப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும்.

10 ஆவது தேசிய சாரணர் ஜம்போரிக்கு வருகைத் தந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு பிரதம சாரணர் பணிப்பாளர் நாயகம் சட்டத்தரணி ஜனப்பித் பெர்னாண்டோ ஜம்போரி கழுத்துப் பட்டி மற்றும் பதக்கம் அணிவித்து வரவேற்பளித்தார்.

இதன்போது தேசிய சாரணர் ஜம்போரியை முன்னிட்டு முத்திரையொன்று வெளியிடப்பட்டதோடு, மாவட்ட அடிப்படையில் தயாரிக்கப்பட்ட சஞ்சிகைகளும் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டன.

இலங்கைசாரணர் இயக்கத்தின் உத்தியோகபூர்வசீருடையை வழங்கும் நிகழ்வை அடையாளப்படுத்தும் வகையில் பிரதம சாரணர் சட்டத்தரணி ஜனப்பிரித் பெர்னாண்டோவுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் சீருடையை வழங்கப்பட்டது.

அதனையடுத்து இலங்கையின் 04





# இலங்கையர்களாக ஒன்றுபட்டால் நாட்டை அபிவிருத்தி செய்யலாம்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

(3ஆம் பக்கத் தொடர்ச்சி...)

பிரதம சாரணர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நினைவுச் சின்னம் வழங்கப்பட்டது.

அதனையடுத்து 10 ஆவது சாரணர் ஜம்போரிக்காக அமைக்கப்பட்ட கூடாரங்களை ஜனாதிபதி பார்வையிட்டார்.

அமெரிக்கா, அவுஸ்ரேலியா, கனடா, சுவீடன், அவுஸ்தி ரியா, இங்கிலாந்து, பிரான்ஸ், போர்த்துக்கல், இந்தியா, தென்கொரியா, சிங்கப்பூர், தாய்லாந்து, பாகிஸ்தான், பங் காளதேஷ், நேபாளம், மலேசியா, வியட்நாம், இந்துநேசியா உள்ளிட்ட 28 நாடுகளை பிரதிநிதித்துவப்படும் சாரணர்கள் 10 தேசிய சாரணர் ஜம்போரியின் பங்குபற்றியிருந்தனர்.



இந்த நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் உரையாற்றுகையில்,

“விவசாய நவீனமயமாக்கல் மற்றும் சுற்றுச்சூழல் பாது காப்பு போன்ற துறைகளை இந்த சாரணர் இயக்கத்துடன் இணைக்க எங்கள் ஆதரவை வழங்க இருக்கிறோம். சார ணர் இயக்கத்தினால் நாட்டுக்காக உங்கள் கடமையைச் செய் வீர்கள் என்று நம்புகிறோம். இப்போதைக்கு அதைச் செய்து விட்டீர்கள். எதிர்காலத்தில் இது இன்னும் வலுவாக செய் யப்படும் என்று எதிர்பார்க்கிறோம்.

சாரணர்கள் மட்டுமின்றி அனைவரும் நாட்டுக்காக தமது பொறுப்பை செய்ய வேண்டும். நம் அனைவரும் அதனை நிறைவேற்றுகிறோமா என்ற கேள்வி எம்முன் இருக்கிறது. அதை அரசில்வாதிகள் நிறைவேற்றுவார்களா என்பதுதான் பிரச்சினை. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நாங்கள் அனைவரும் கஷ்டங்களை எதிர்கொண்டோம்.

மின்சாரம் இருக்கவில்லை, எரிபொருள் இருக்கவில்லை, விவசாயத்திற்கு அவசியமான உரம் இருக்கவில்லை. மூன்று வேளைக்கும் போதுமான உணவு இல்லை. நாங்கள் மிகவும் கடினமான காலகட்டத்தை கடந்தோம். நம் நாடு வங்குரோத் தடைந்தது. ஆனால் தற்போது அந்த வங்குரோத்து நிலை யில் இருந்து படிப்படியாக வெளியேறி வரமுடிந்துள்ளது. மக்களுக்கு ஓரளவு நிவாரணம் வழங்கினாலும் இன்னும் கஷ்டமான நிலைமை இருக்கிறது. ஆனால் நாட்டை வெற்றி பெறச் செய்ய வேண்டுமானால் நாம் இந்தப் பாதையில் தொடர வேண்டும்.

நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து மீட்ட பிறகு, அடுத்த தலைமுறைக்கு இதனை விட சிறந்த நாட்டை உருவாக்குவது தான் நம் அனைவரினதும் கடமை. இந்த நிலை மீண்டும் ஏற்படாத வகையில் நாடு கட்டியெழுப்பப்பட வேண்டும். அரசியல்வாதிகள் அதற்கு இன்னும் தயாராக இருக்கிறார்களா என்ற கேள்வி நம்முன் இருக்கிறது.

அதனால் அனைவரும் இணைந்து இந்தப் பய ணத்தை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். நாம் அனைவரும் ஒன்றிணைந்தால் இன்னும் 10-15 வருடங்



களில் சிறந்த நாட்டை உருவாக்க முடியும். இந்த நாட்டின் வருங்கால சந்ததியினருக்கான நமது கடமையாக நான் அத னைக் குறிப்பிடுவேன். தேசிய சாரணர் ஜம்போரிக்கு எனது வாழ்த்துக்களை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.” - என்றார்.





# அழுத்தங்கள் வந்தாலும் குற்றங்களுக்கு எதிரான எந்தவொரு நடவடிக்கையும் நிறுத்தப்படமாட்டாது

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் உறுதி




**“போதைப்பொருள் மற்றும் பாதாள உலகத்தை ஒடுக்குவதற்கும், பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுக்கும் நோக்கிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ள எந்தவொரு நடவடிக்கையையும் நிறுத்தத் தயாரில்லை. மேலும், 2023 டிசம்பர் 17 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட ‘யுக்திய’ நடவடிக்கையின் மூலம் கைப்பற்றப்பட்ட போதைப்பொருள்களின் பெறுமதி 7.8 பில்லியன் ரூபா.”**

**– இவ்வாறு என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.**

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“போதைப்பொருள் மற்றும் பாதாள உலகத்தை ஒடுக்குதல் மற்றும் பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுப்பது தொடர்பான நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எத்தகைய அழுத்தங்கள் வந்தாலும் இந்த செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நாங்கள் தயாராக இல்லை.

இந்த வேலைத்திட்டம் தொடர்பில் எம்மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. இந்த செயற்பாட்டைச் சீர்குலைக்க பல்வேறு நபர்களும் குழுக்களும் முயற்சித்து வருகின்றனர். போதைப்பொருள் வலையமைப்பு மூலம் பணம் பெறுபவர்கள் அந்தக் குழுக்களுக்கு பணத்தை செலவிடுவதாக எமக்கு தகவல் கிடைத்துள்ளது.

கடந்த டிசம்பர் மாதம் 17ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட “யுக்திய” நடவடிக்கையின் மூலம் கைப்பற்றப்பட்ட போதைப்பொருள்களின் பெறுமதி 7.8 பில்லியன் ரூபாவாகும். பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட வாகனங்கள் மற்றும் கட்டடங்களின் பெறுமதி 725 மில்லியன் ரூபா. அதற்காக செய்யப்பட்ட சோதனைகளின் எண்ணிக்கை 58,562. அந்த நடவடிக்கைகளில் கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 58,234 ஆகும்.

மேலும், குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்கள அலுவலகத்தில் தற்போதுள்ள வரிசைகளை குறைக்கும் வகையில் E Passport சேவையை அறிமுகப்படுத்த தயாராகி வருகிறோம். கொரிய மொழி புலமை பரீட்சை காரணமாக குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்கள அலுவலகத்திற்கு முன்பாக மீண்டும் வரிசைகள் அதிகரித்துள்ளன. அந்தப் பிரச்சினையைத் தீர்க்கும் வகையில் கொரிய அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி தேர்வில் சித்தி பெறுபவர்களுக்கு மாத்திரம் கடவுச்சீட்டு வழங்க ஏற்பாடு செய்ய உள்ளோம்.

புதிய அடையாள அட்டையை ஆள்கள் பதிவு திணைக்களத்தின் ஊடாக வழங்குவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயாராக உள்ளமையையும் கூறவேண்டும். தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் ஊடாக, போதைப்பொருள் பாவனையைத் தடுப்பதற்காக பாடசாலைகள் மற்றும் பொலிஸ் இணைந்து ஏற்கனவே பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றன.

அத்துடன் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை வேட்பாளராக நிறுத்த நாம் அனைவரும் ஆதரவு வழங்குகிறோம். இந்த நாட்டை வீழ்ச்சியடைந்த நிலையில் இருந்து மீட்டெடுக்கவும், வரிசை யுகத்தை முடிவுக்கு கொண்டு வரவும் ஜனாதிபதியால் முடிந்தது. நிலைமையை புரிந்து கொண்டவர்கள் வேறொரு ஜனாதிபதியைப் பற்றி சிந்திக்கக் கூடாது என்பதே எமது கருத்தாகும்.” – என்றார்.

# போதனா வைத்தியசாலையில் குழப்பம் விளைவித்தவர் கைது




யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அலுவலர்களுடன் முரண்பாட்டில் ஈடுபட்டார் எனக் கூறப்படும் நபரொருவர் பொலிஸாரினால் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

காரைநகரில் இருந்து அம்புலன்ஸில் கொண்டுவரும்போது உயிரிழந்த நபரொருவரின் சடலத்தை விரைவாகத் தருமாறு வைத்தியசாலையின் மேற்பார்வையாளர் அலுவலகத்திற்குச் சென்று தகாத வார்த்தைகளைப் பேசிய இந்த நபர், அலுவலகர்களுடன் முரண்பட்டு, அங்கிருந்த பெயர்ப் பலகையையும் சேதப்படுத்திய நிலையில் வைத்தியசாலைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

அந்நபர் மதுபோதையில் இருந்தார் எனத் தெரிவிக்கப்படும் நிலையில் சந்தேக நபரிடம் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாட்டின் 'பெருங்குடி' மக்களின் பிரதான பிரச்சினை ஒன்றை ஆழ்ந்த கரிசனையுடன் குறிப்பிட்டு, சுட்டிக்காட்டி, அதைத் தீர்த்து வைக்க அங்கு மக்கள் பிரதிநிதிகளிடம் கோரிக்கை முன்வைத்திருக்கின்றார் இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத்.

புத்தாண்டுக்கு முன்னதாக சாமானியர்கள் அருந்தும் சிறப்பு சாராயத்தின் விலையை அரசாங்கம் குறைக்க வேண்டும் என அவர் கோரியுள்ளார்.

சாராயத்தின் விலை அபரிமிதமாக உயர்ந்துள்ளதாகவும், அதனால் மக்கள் கள்ளச்சாராயத்தை (கசிப்பை) குடிக்க ஈடுபாடு காட்டுகின்றனர் எனவும் அவர் நாடளுமன்றத்தில் தெரிவித்திருக்கின்றார்.

"சாராய விலை உயர்ந்துள்ளது. மக்கள் தற்போது கள்ளச்சாராயம் குடிக்கின்றனர். மதுக்கடைகள் வெறிச்சோடிக் கிடக்கின்றன. மக்கள் தினமும் 'கசிப்பு' குடிக்க முடியாது. புத்தாண்டுக்கு 'சாராயம்' குடிக்க வேண்டும்" என அவர் உணர்ச்சிப் பூர்வமாக தெரிவித்தார்.

ஒரு போத்தல் சாராய விலையை 1,500 ரூபாவாகக் குறைக்க முடியும் எனத் தெரிவித்த அவர், சாராய உற்பத்திற்கு தேவையான சேர்மானங்களை பெல்வத்தை, செவனகல மற்றும் எதிமலே ஆகிய இடங்களில் இருந்து பெற்றுக் கொள்ள முடியும் எனவும் கூறியிருக்கின்றார்.

பெருங்குடி மக்களுக்காகப் பகிரங்கமாகக் கவலைப்படும் உண்மை நண்பர்களும் சட்டவாக்கல் துறையில் இருக்கின்றமை பெருங்குடி மக்களுக்குப் பெருமைதானே...!

## பேசிப் பேசியே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய மனோ கணேசன் இது தொடர்பில் மேலும் கூறியதாவது,

"இந்தச் சபையில் நான் நேற்று (நேற்றுமுன்தினம்) இல்லாதபோது ஒரு மலையக அமைச்சர் என்னைப் பற்றி பொய், பித்தலாட்டம் நிறைந்த உரையை ஆற்றிவிட்டு சென்றுவிட்டார். அவருக்குப் பதில் சொல்வது எனக்கு இழுக்கு என நினைக்கின்றேன். இருந்தாலும்கூட நாட்டுக்கும், சமூகத்துக்கும் உண்மை தெரிய வரவேண்டும் என்பதற்காக ஒன்றைக் கூற விரும்புகின்றேன்.

2017 இல் எமது அரசின் காலத்தில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் நாங்கள் கேட்டுப் பெற்றுக்கொண்ட 10 ஆயிரம் பெருந்தோட்ட வீடுகளுக்கான உறுதிமொழி ஐந்து வருடங்களுக்குப் பிறகு கடந்த திங்கட்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

10 ஆயிரம் இந்திய வீட்டுத் திட்டத்தை வாழ்த்தி வரவேற்கின்றோம் என்றே நான் கூறி இருந்தேன். இப்படி இருந்தும் மனோ கணேசன் கூறுவதைக் கேட்டு பிள்ளையாரே அழுவார் என அந்த அமைச்சர் கூறுகின்றார். நாடாளுமன்ற சிறப்புரிமையைப் பயன்படுத்தி பொய்யுரைக்கின்றார். பேசி, பேசியே கொல்கின்றார். பேசுவதைத் தவிர வேறு எதையும் செய்யவில்லை.

பிள்ளையார் அழமாட்டார், பிள்ளையார் என்றால் யார் கணேசன், அந்தப் பெரிய பிள்ளையார் கூறுவதைத்தான் இந்தச் சின்னப் பிள்ளையார் செய்கின்றார் என்று பிள்ளையார் மகிழ்ச்சியடைகின்றார். இதுவே உண்மை." – என்றார்.

(மனோ கணேசன், ஜீவன் தொண்டமானின் பெயரைக் குறிப்பிடாவிட்டாலும் மலையக அமைச்சர் என விளித்திருந்தார்.)

## ஜனாதிபதித் தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உத்தேசமும் அரசுக்கு இல்லை. எனவே, ஜனாதிபதித் தேர்தல் ஒக்டோபர் மாதமளவில் நிச்சயம் நடத்தப்படும்."

– இவ்வாறு நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ ஊடகங்களிடம் தெரிவித்தார்.

இவ்வருடம் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படுமா என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஜனாதிபதித் தேர்தல் நிச்சயம் நடத்தப்படும். ஒக்டோபர் மாதமளவில் ஜனாதிபதித் தேர்தலை நடத்த முடியும்.

ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்க அரசமைப்பில் ஏற்பாடு இல்லை. அதற்கான தேவைப்பாடும் அரசுக்கு இல்லை.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்படுமா என என்னால் கூற முடியாது. அவ்வாறு நடத்துவதற்கு ஜனாதிபதிக்கு முடியும். அதற்கான சட்டபூர்வ அனுமதி அவருக்கு உள்ளது. ஜனாதிபதித் தேர்தலுக்கு மட்டும் நிதி ஒதுக்கப்பட்டிருந்தாலும், குறைநிரப்பு பிரேரணை ஒன்றின் ஊடாக நாடாளுமன்றத் தேர்தலுக்கான நிதியைப் பெற்றுக்கொள்ள முடியும்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவது தொடர்பில் நீதி அமைச்சர் என்ற வகையில் நானோ அல்லது அமைச்சரவையில் வேறு எவரோ யோசனை எதையும் முன்வைக்கவில்லை. அதற்கான உத்தேசமும் இல்லை.

தற்போதைய சூழ்நிலையில் அது ஜனநாயக ரீதியிலான பொறிமுறையும் அல்ல. சர்வஜன வாக்கெடுப்பைத் தவறாகப் பயன்படுத்துவது ஜனநாயகம் அல்ல. 1982 இல் நடத்தப்பட்ட சர்வஜன வாக்கெடுப்பால் ஏற்பட்ட கறுப்புப் புள்ளி இன்னும் மாறவில்லை." – என்றார்.

## சந்திரிகா - மைத்திரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

களமிறங்கும் திட்டத்தில் மைத்திரி இருப்பதாலேயே இந்த இழுபறி நீடிக்கின்றது என்று தகவல் அறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தற்போதைய தலைவரான மைத்திரியை வேட்பாளராக இறக்குவதில் அக்கட்சியின் முன்னாள் தலைவர் சந்திரிகாவிடம் மாறுபட்ட கருத்துக்கள் உள்ளன என்று அறியமுடிகின்றது.

அதேவேளை, அமைச்சர்களாக இருக்கின்ற சு.க. உறுப்பினர்கள் எவரும் மைத்திரியைக் களமிறக்க விரும்பவில்லை

என்றும், சு.க ரணிலுக்கே ஆதரவு வழங்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் அவர்கள் உள்ளனர் என்றும் கூறப்படுகின்றது.

## தேர்தலை எப்படி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

"எந்தத் தேர்தல் முதலில் நடக்கும்? ஜனாதிபதித் தேர்தலா? நாடாளுமன்றத் தேர்தலா?" – என்ற கேள்விக்கு அவர் பதிலளிக்கும்போது,

"எந்தத் தேர்தலையும் நடத்துவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசுக்கு விருப்பம் இல்லை. இந்த அரசு தேர்தல் அச்சத்தில் உள்ளது. வரலாற்றில் முதல் தடவையாக இரண்டு தேர்தல்களை ஒத்திப்போட்டுள்ளது.

வரலாற்றில் நாடாளுமன்றத் தேர்தலை 6 வருடங்களுக்கு ஒத்திப்போட்டது இந்த ஐக்கிய தேசிய கட்சி. தேர்தல் நடத்தப்பட வேண்டுமா, இல்லையா என்று சர்வஜன வாக்கெடுப்பை நடத்தியது. வாக்குச் சாவடிகளுக்குள் புகுந்து கள்ள வாக்குகளைப் போட்டுத் தங்களுக்குத் தேவையான முடிவைப் பெற்றுக்கொண்டது ஐக்கிய தேசியக் கட்சி அரசு. அதனூடாக நாடாளுமன்றத் தேர்தலை 6 வருடங்களுக்கு ஒத்திப்போட்டது.

அப்படிப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் இப்போது ஜனாதிபதியாகி இரண்டு தேர்தல்களை (உள்ளூராட்சி சபைத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல்) ஒத்திப்போட்டுள்ளார். இதனால், ரணில் விருப்பத்தோடு தேர்தலை நடத்துவார் என்று சொல்ல முடியாது. இருந்தாலும், அவர் தேர்தலை நடத்தும் வரை நாம் காத்திருக்கத் தேவையில்லை.

ஜனாதிபதியின் பதவிக் காலம் முடிவதற்கு ஒரு மாதம் இருக்கும்போது ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டும் என்று அரசமைப்பு சொல்கின்றது." – என்றார்.

"நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்று சொல்லப்படுகின்றதே?" – என்ற கேள்விக்கு அவர் பதிலளிக்கும்போது,

"அதைச் செய்வதாக இருந்தால் இரண்டு முக்கிய விடயங்கள் தேவை. ஒன்று நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு

பெரும்பான்மை தேவை. அடுத்தது சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தல் இந்த வருடம் ஒக்டொபரில் நடத்தப்பட வேண்டும். இந்த இரண்டு விடயங்களையும் செய்வதற்குக் காலம் போதாது.

முக்கிய பிரச்சினைகளை மூடி மறைப்பதற்காக அரசு இந்த மாதிரியான விடயங்களை வெறுமனே பேசுபொருளாக்குகின்றது.

அரசுக்குத் தேர்தலை நடத்துவதற்கு விருப்பம் இல்லை. எப்படி தேர்தலை நிறுத்தலாம் என்று அரசு யோசிக்கின்றது.

அப்படியான திட்டங்களில் ஒன்றுதான் இதுவும்." – என்றார்.

# கெஹலிய ரம்புக்வெல்லவின் ஊழலுக்கு ஆளுந்தரப்பு பொறுப்புக்கூற வேண்டும்

## துஷார இந்துனில் எம்.பி. சபையில் தெரிவிப்பு



சிறைவாசம் அனுபவிக்கும் கெஹலிய ரம்புக்வெல்ல அரச நிதியை மோசடி செய்துள்ளார் என்பது நீதிமன்றத்தில் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இவருக்கு எதிராக கொண்டு வந்த நம்பிக்கையில்லா பிரேரணையை தோற்கடித்து அவரைப் பாதுகாத்த தரப்பினர் அனைவரும் இந்த ஊழல் மோசடிக்குப் பொறுப்புக்கூற வேண்டும்."

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடளுமன்ற உறுப்பினர் துஷார இந்துனில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில்நேற்று இடம்பெற்றநாட்டின்தற்போதைய நிலைவரம் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் நாட்டு மக்கள் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளார்கள். வாழ்க்கைச் செலவுகள் நாளாந்தம் அதிகரித்த நிலையில் உள்ளதால் மக்கள் தமது சேவை மற்றும் தேவைகளைக் குறைத்துக் கொண்டுள்ளார்கள். எரிபொருள் விலை மற்றும் மின்கட்டண அதிகரிப்பு பெரும்பாலான மக்களுக்கு பாரிய சுமையாகக் காணப்படுகிறது.

தேசியம், இனவாதம் மற்றும் மதவாதம் பற்றி குறிப்பிட்டு நாட்டு மக்களை தவறாக வழிநடத்தி கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்தார். கோட்டாபய ராஜபக்ஷவின் தவறான பொருளாதார முகாமைத்துவத்தினால் பொருளாதாரம் குறுகிய காலத்துக்குள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டது. நாடு வங்குரோத்து நிலையை அடைந்தது.

கொவிட் பெருந்தொற்று தாக்கத்தினால் பொருளாதாரம் பாதிக்கப்பட்டதாகக் குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

ஏனெனில், கொவிட் பெருந்தொற்று தாக்கத்துக்கு முன்னதாகவே பொருளாதாரத்தை சீர்குலைக்கும் தீர்மானங்களை கோட்டாபய ராஜபக்ஷ அமுல்படுத்தியிருந்தமையால், வரிச்சலுகை வழங்கியதால், திறைச்சேரியின் கையிருப்பு மட்டுப்படுத்தப்பட்டது.

அத்தியாவசிய உணவுப் பொருள்களிலும் மோசடி, சீனசேதன பசளை உரத்திலும் மோசடி எனப் பலதரப்பட்ட வழிகளில் மோசடிகள் இடம்பெற்றன. அதற்கு ஜனாதிபதி என்ற அடிப்படையில் கோட்டாபய ராஜபக்ஷ ஆதரவு வழங்கினார்.

மக்களின் கடும் எதிர்ப்பு மற்றும் போராட்டத்தை தொடர்ந்து கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகினார். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பொதுஜன பெரமுனவின் ஆதரவுடன் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். பொருளாதார நெருக்கடிக்கான தீர்வு என்று குறிப்பிட்டுக் கொண்டு நாட்டு மக்களை பாரிய நெருக்கடிக்குள் ஜனாதிபதி தள்ளியுள்ளார்.

எரிபொருள், மின்கட்டணம் உட்பட வாழ்க்கைச் செலவுகள் சடுதியாக அதிகரிக்கப்பட்டுள்ளமையைத் தொடர்ந்து அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலைகள் பன்மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளன.

மந்த போசனையால் பிள்ளைகள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அரசாங்கத்துக்கு சார்பான தரப்பினர் மாத்திரம் முன்னேற்றமடைந்துள்ளார்கள். இதுவா ஜனாதிபதியின் பொருளாதார மீட்சியின் பெறுபேறு?

பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்திய கோட்டாபய ராஜபக்ஷவின் நிர்வாகத்தை தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுக்கிறார்.

எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவின் ஊழல் மோசடி குறித்து நாங்கள் ஆரம்பத்தில் இருந்து குறிப்பிட்டோம். அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வந்தோம்.

கெஹலிய ரம்புக்வெல்ல அரச நிதியை மோசடி செய்துள்ளார் என்பதை நீதிமன்றம் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது. அவருக்கு எதிராக கொண்டுவந்த நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராக வாக்களித்து அவரைப் பாதுகாத்த தரப்பினர் அனைவரும் ஊழல் மோசடிக்குப் பொறுப்புக்கூற வேண்டும். நாட்டு மக்களை சொல்லொணா துயரத்துக்கு உள்ளாக்கியுள்ள பாவச் செயலுக்கு நிச்சயம் பதிலடி கிடைக்கும்." – என்றார்.

# முடிந்தால் வெளியில் வந்து பேசுங்கள்!

## ஜீவனுக்கு மனோ பகிரங்க சவால்

"மலையக அமைச்சர் (ஜீவன் தொண்டமான்) கோபமப் பேசுகின்றார், பதற்றத்துடன் பேசுகின்றார். 5 வருடங்களாக வீட்டுத் திட்டத்தை முன்னெடுக்க முடியாமல்போனதையிட்டு தான் அவர் பதற்றமடைய வேண்டும். 2019 ஆம் ஆண்டில் இருந்து அரசில் இருக்கும் இந்த நபர் பேசி, பேசியே காலத்தை ஓட்டுகின்றார்."

– இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் கூறினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர்,

"கொழும்பில் "நாம் 200" நிகழ்வை நடத்தினார்கள், எனக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. இருந்தும் விழா சிறப்பாக நடைபெற வாழ்த்துக்களைத் தெரிவித்தேன். நான் நாகரிகமும், பண்பாடும் கொண்ட குடும்பப் பின்னணியில் வளர்ந்தவன். எனது பெற்றோர் என்னை அப்படித்தான் வளர்த்துள்ளனர். ஆகவே, எனக்கு நாகரிகம், பண்பாடு தெரியும்.

எமது கண்டி மாவட்ட எம்.பி. வேலுகுமார் இங்கே இருக்கின்றார். கண்டி, ஹந்தானையில் இவர் 22 ஏக்கர் நிலத்தை அபகரித்துவிட்டார் என்று மலையக அமைச்சர் பொய் கூறுகின்றார். இந்த அமைச்சர் இது பற்றி நாடாளுமன்றத்துக்கு வெளியே வந்து பேசுவாரானால் நாம் நீதிமன்றம் செல்லத் தயாராக இருக்கின்றோம்.

நானும் கண்டிக்கு வருகின்றேன். வேலுகுமார் பிடித்து வைத்துள்ளார் எனக் கூறப்படும் நிலத்தை மக்களுக்குப் பிரித்து வழங்குவோம். எனவே, தயவு செய்து பொய்கூற வேண்டாம்." – என்றார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# இலங்கை போதிக்கும் பாடம்

“இலங்கை அமெரிக்காவின் பிராந்தியம் அல்ல. இறையாண்மை உள்ள சுயாதீனமான ஒரு நாடு. எமது நாட்டின் சட்ட திட்டங்கள் தொடர்பில் நமது நாடாளுமன்றத்துக்கே உரித்து உண்டு . அதில் தலையிட இது ஒன்றும் அமெரிக்காவின் பிராந்தியம் அல்ல.”

- இப்படி அமெரிக்க தேசத்திற்குப் பாடம் எடுத்திருக்கின்றது இலங்கை.

இவ்வாறு அமெரிக்காவைக் கீழ்மைப்படுத்தி கருத்து வெளியிட்டவர் அமைச்சர் பந்துல குணவர்தன. எனினும் அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இந்த விடயங்களை அவர் கூறியிருக்கின்றமையால், இக்கருத்து தனி ஓர் அமைச்சரின் கருத்து வெளிப்பாடாக அல்லாமல், இது இலங்கை அரசின் உத்தியோகபூர்வ நிலைப்பாடாகக் கொள்ளத்தக்கதாகின்றது.

இலங்கை நாடாளுமன்றத்தில் அண்மையில் நிறைவேற்றப்பட்ட நிகழ்நிலைக் காப்புச்சட்டத்தின் பாதிப்புகள் தொடர்பில் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் கவலை, கரிசனை வெளியிட்டிருந்தார்.

அது தொடர்பிலேயே அமைச்சரவைப் பேச்சாளர் அரசின் சார்பில் இக்கருத்துக்களை முன் வைத்திருக்கின்றார்.

பூமிப் பந்தில் - உலக வரைபடத்தில் - இருக்கும் ஒரே ஒரு நாடு அல்ல இலங்கை. உலகில் உள்ள 195 நாடுகளில் இலங்கையும் ஒன்று.

உலக நாடுகள் அனைத்துக்குமான பொது செல்நெறியிலிருந்து விலகி இலங்கை தனித்துப் பயணிக்க முடியாது.

இலங்கை தனித்துவமான - இறைமை கொண்ட - சுதந்திரமான - நாடு என்று தன்னை அழைத்துக் கொண்டாலும், உலக நாடுகளின் பொது ஓட்டத்திலிருந்து விலகியோ, தனித்தோ இலங்கை இயங்கவோ பயணிக்கவோ முடியாது. அது சாத்தியமற்றது.

உலக ஓட்ட ஒழுங்கோடு ஒத்திசைந்து இலங்கையும் ஓடுவது தவிர்க்க முடியாத கட்டாயம்.

அந்தக் கட்டாயத்தில் ஒன்றுதான் நாட்டின் பிரஜை ஒவ்வொருவருக்கும் அடிப்படை உரிமைகளையும் நியாயமான சுதந்திரங்களையும் அந்த நாடு வழங்கி உறுதிப்படுத்துவதாகும்.

ஒரு சட்ட ரீதியான நாடு என்ற முறையில் தனது நாட்டின் ஒவ்வொரு பிரஜைக்குமான அடிப்படை உரிமைகளை - வசதிகளை - வாய்ப்புகளை - வழங்கி உறுதிப்படுத்துவது இலங்கை தேசத்தினதும் கடப்பாடுதான்.

நிகழ்நிலை காப்புச் சட்டத்தையொட்டி அமெரிக்கா உட்பட மேற்குலகம் சில, பல விடயங்களை வற்புறுத்துவது - செய்யும்படி இலங்கையை வலியுறுத்துவது - கூட இத்தகைய பொறுப்புணர்வின் அடிப்படையில் எழுந்தது தான்.

அப்படி சர்வதேச ரீதியில் வற்புறுத்தப்படும் விடயங்களைக் கட்டாயமாக நிறைவேற்ற வேண்டிய பொறுப்பிலும் கடப்பாட்டிலும் உள்ள இலங்கை நாடு, அதை மறந்து ‘இது எங்கள் நாடு, இங்கு நாங்கள்தான், எதுவும் செய்வோம்’ என்ற பாணியில் திமிர்த்தனப் பதிலை அளித்திருப்பது முறையற்றது. அறிவற்ற செயற்பாடு.

1948 இல் ஐக்கிய நாடுகள் பொதுச் சபை மனித உரிமைகள் பற்றிய பிரகடனத்தை ஏற்றுப் பறைசாற்றியது.

அமெரிக்கா, இலங்கை உட்பட பெரும்பாலும் அனைத்து நாடுகளுமே மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச பட்டயத்தை ஏற்று அங்கீகரித்துள்ளன.

அத்தகைய மனித உரிமைகளுக்குப் பங்கம் விளைவிக்கும் சட்டங்கள், அடக்குமுறை நடவடிக்கைகள் பூமிப் பந்தின் எந்த ஒரு முனையில் நடந்தாலும், அதற்கு எதிராக கிளர்வது சர்வதேச ரீதியில் தவிர்க்க முடியாத கட்டாயமாகி வருகின்றது.

இலங்கையில் புதிதாகக் கொண்டுவரப்பட்ட நிகழ்நிலை காப்புச் சட்டமும் இந்த நாட்டு மக்களின் கருத்துக்களை வெளிப்படுத்தும் சுதந்திரம் உட்பட சுயாதீன செயற்பாடுகளுக்கு ஆப்பு வைப்பதாகப் பொதுக் கருத்து வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

அந்தப் பின்புலத்தில் இந்தச் சட்டத்தை எதிர்ப்பதும், அதையும் மீறி அந்தச் சட்டத்தை இலங்கை அரசு தனது ஆட்சித் துறை அதிகாரத்தின் மூலம் இலங்கைப் பிரஜைகள் மீது வல்வந்தமாக பிரயோகித்தால் அதைக் கண்டித்து, எதிர்ப்புக் காட்டுவதும் உலக அரசுகளின் கடப்பாடாகவே கருதப்படுகின்றது.

அந்த வகையிலேயே இலங்கையில் அடிப்படை உரிமைகள் மீறப்படுவதற்கு எதிராக அமெரிக்கத் தூதவர் உட்பட்ட குழுவினர் எதிர் கருத்துக்களை - எதிர்வினைகளை - வெளிப்படுத்தி இருக்கின்றனர்.

தமது தவறு தம்மையே சுடுவதால், அதைத் தாங்க முடியாமல் இப்படி அமெரிக்காவுக்குப் பாடம் எடுப்பது போல கருத்து கூறி கொழும்பு தப்பப் பார்க்கின்றது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவோம், பிற அடக்குமுறைச் சட்டங்களை ஏவ மாட்டோம் என்றெல்லாம் வாக்குறுதி கொடுத்து, அதன் மூலம் வரி விதிப்பற்ற ஏற்றுமதி வாய்ப்புக்களை - சலுகைகளை - மேற்குலகிடமிருந்து பெற்று அதிக லாபமிட்டுகின்றது இலங்கை.

மனித உரிமைகளைப் பேணுவது தொடர்பான வாக்குறுதிகளை அளித்து, அவற்றின் மூலம் சர்வதேச நாடுகளிடமிருந்து கடன், வெகுமதி, அன்பளிப்பு, நன்கொடை மற்றும் பிற வசதிகளை ஈட்டிக் கொள்ளும் இலங்கை அரசு, நாட்டில் மனித உரிமை மீறல் விடயங்களில் அமெரிக்கா தலையிடக்கூடாது என்று தத்துவம் பிளப்பது அர்த்தமற்றது.

# பஞ்சாப் - ஹரியாணா எல்லையில் வலுக்கும் விவசாயிகள் போராட்டம்

## இளம் விவசாயி உயிரிழப்பு



டில்லி நோக்கி செல்லும் 'டில்லி செலோ' பேரணி நேற்று மீண்டும் தொடங்கியது. பஞ்சாப் – ஹரியாணா எல்லையில் போராட்டம் மேற்கொண்ட விவசாயிகள் மீது கண்ணீர் புகை குண்டுகள் வீசி ஹரியாணா பொலிஸார் தடுத்து நிறுத்தினர்.

ஷம்பு – கனவுரியில் தடுப்புகளை விவசாயிகள் மீற முற்பட்டப்போது ஹரியாணா பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டனர். அப்போது, இளம் விவசாயி ஒருவர் படுகாயமடைந்து உயிரிழந்தார்.

இது குறித்து விவசாயிகள் சங்க தலைவர் பல்தேவ் சிங் சிர்சா கூறுகையில்,

"சங்ருர் – ஜிந்த் எல்லையில் உயிரிழந்தவர் 21 வயது விவசாயி சுபாகரன் சிங் என்பது தெரியவந்துள்ளது. பஞ்சாப்பின் பதிண்டா மாவட்டத்தின் பாலோகே கிராமத்தைச் சேர்ந்தவர்" என்றார்.

இளம் விவசாயி உயிரிழந்ததை பாட்டியாலா மருத்துவ அதிகாரி ஹெச்.ரேகியும் உறுதி செய்தார். கண்ணீர் புகை குண்டுகளுடன் ரப்பர் புல்லட்டுகளைக் கொண்டு ஹரியாணா பொலிஸார் தாக்கியதாக விவசாயிகள் குற்றம்சாட்டியுள்ளனர்.

மத்திய அரசின் பரிந்துரைகளை நிராகரித்து டில்லி நோக்கிச் செல்லும் போராட்டத்தில் 14 ஆயிரம் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். 1200 ராக்டர்கள், 300 கார்கள், 10 மினி பஸ்களில் அவர்கள் குவிந்தனர். கண்ணீர் புகை குண்டுகளை எதிர்கொள்ளும் வகையில், விவசாயிகள் பலரும் தங்கள் முகத்தில் கவசம் அணிந்துள்ளன. சாக்குகளை தண்ணீரில் நனைத்து வைத்துள்ளனர். டிராக்டர்களையே தங்குமிடம் போல் தயார் செய்தும் வைத்துள்ளனர்.

இந்தப் பின்புலத்துடன், பஞ்சாப் – ஹரியாணா எல்லையில் போராட்டம் நடத்தி வரும் விவசாயிகள் புதன்கிழமை டெல்லி நோக்கி செல்ல முயன்றபோது, அவர்களைத் தடுத்து நிறுத்த ஹரியாணா பொலிஸார் கண்ணீர் புகை குண்டுகளை பலமுறை வீசினர். இதனால் மீண்டும் அங்கு பரபரப்பு சூழல் நிலவியது.

டில்லிக்குள் நுழைய விடாமல் விவசாயிகளை தடுக்க பஞ்சாப் – ஹரியாணா எல்லை பகுதிகளில் 8 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டு உள்ளது. டிக்ரி மற்றும் சிங்கு எல்லையில் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். பல அடுக்கு தடுப்பு வேலிகள் அமைத்துள்ளனர். கொன்க்ரீட் தடுப்புகள், வாகனங்கள் முன்னேற இயலாத வண்ணம் இரும்பு ஆணிகள் பதிக்கப்பட்ட தடுப்புகள் என முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். காசிபூர் எல்லையில் 2 பாதைகள் மூடப்பட்டுள்ளன.

வீதியால் மட்டுமல்லாமல் ஆறு, கால்வாய் வழியாகக் கூட விவசாயிகள் முன்னேறிவிடக் கூடாது என்று பொலிஸார் கண்காணிப்பை தீவிரப்படுத்தியுள்ளனர். பஞ்சாப் பொலிஸாருக்கு மத்திய உள்துறை அமைச்சகம் அளித்த உத்தரவின் பேரில் கெடுபிடிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே, விவசாய சங்கத் தலைவர் சர்வான் சிங் பாந்தர் கூறுகையில், "இளைஞர்கள், விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் யாரும் இப்போது முன்னேற வேண்டாம். விவசாயத் தலைவர்கள் மட்டும் டில்லி நோக்கி முன்னேறுகிறோம். நாங்கள் யாரையும் தாக்கப்போவதில்லை. நாங்கள் வெறுங்கையுடன் செல்கிறோம். நாங்கள் டில்லியில் மத்திய அரசை முடிவு எடுக்கச் சொல்லி வலியுறுத்துவோம்.

அரசாங்கம் எங்களை கொலைகூட செய்யட்டும். ஆனால், எங்களை அடக்குமுறைக்கு உள்ளாக்க வேண்டாம். குறைந்தபட்ச ஆதார விலைக்கு சட்டபூர்வ அங்கீகாரத்தை அறிவித்து பிரதமர் இந்தப் போராட்டத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்பதுதான் எங்களின் வேண்டுகோள். விவசாயிகளை ஒடுக்கும் அரசாங்கத்தை தேசம் ஒருபோதும் மன்னிக்காது" என்றார்.



# பேச்சுக்கள் இறுதியானதும் நல்ல செய்தி சொல்கிறேன்

## கூட்டணி குறித்து கமல் தகவல்

"கூட்டணி பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கிறது. இறுதியானதும் நல்ல செய்தி சொல்கிறேன்." என்று மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவர் கமல்ஹாசன் தெரிவித்துள்ளார்.

மக்கள் நீதி மய்யம் கட்சி ஆரம்பித்து நேற்று ஏழாம் ஆண்டு தொடங்குவதை முன்னிட்டு கட்சி அலுவலகத்தில் நடந்த விழாவில் கமல்ஹாசன் பேசினார். பின்னர் செய்தியாளர்களுக்கு அவர் கருத்து தெரிவிக்கையில்,

"கூட்டணி பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கிறது. இறுதியானதும் நல்ல செய்தி சொல்கிறேன். சினிமாவை விட்டு முழுநேர அரசியலில் இறங்குவது விஜய்யின் இஷ்டம். அவர் செய்கிற அரசியல் அவர் பாணி. நான் செய்கிற சினிமா என் பாணி. அவரவர்களுக்கு பிடித்த விஷயங்களை செய்து கொண்டிருக்கிறோம். விஜய்யுடன் ஏற்கனவே நான் பேசியிருக்கிறேன். அரசியலுக்கு வரவேண்டும் என்று விஜய் சொன்னதும் முதல் வரவேற்பு என்னுடையதாக தான் இருந்தது.

கட்சி தொடங்கிய இந்த ஆறு ஆண்டுகால பயணத்தில் நிறைய பாடங்கள் கற்றுக்கொண்டோம். எது செய்யக் கூடாது, எதை யாரும் செய்யாமல் மறந்துவிட்டார்கள் என்பதையும் கற்றுக்கொண்டோம். இந்த ஆறு ஆண்டுகளில் எந்த பத்திரத்திலும் கையெழுத்து போடவில்லை. யாரிடமும் காசு வாங்கவில்லை என்பதே எங்களின் சாதனை.

கட்சி அரசியலை மழுங்கடித்து தேசத்தைப் பற்றி சிந்திக்க வேண்டிய நேரம் இது என்று நான் ஏற்கனவே கூறியுள்ளேன். தேசத்தைப் பற்றி சுயநலமில்லாமல் சிந்திக்கும் எவருடனும், எனது மக்கள் நீதி மய்யமும் துணை நிற்கும். ஆனால் நீங்கள் உள்ளூர் அரசியல் நடத்தினால், நாங்கள் அதில் ஒரு பகுதியாக இருக்க மாட்டோம். கோவை தெற்கு தொகுதியில் மீண்டும் போட்டியிடுவேனா என்பதை கூட்டணி பேசி முடித்துவிட்டு சொல்கிறேன்." – என்றார்.

# அமெரிக்க உதவியை நாடுகின்றது உக்ரைன்



ரஷ்யாவுடனான போரில் அமெரிக்காவின் புதிய இராணுவ உதவிகளை உக்ரைன் எதிர்பார்ப்பதாக உக்ரைனின் பிரதமர் டெனிஸ் ஷ்மிஹால் தெரிவித்துள்ளார்.

போரால் உருக்குலைந்துள்ள உக்ரைனை மறுசீரமைப்பது தொடர்பான மாநாடு ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடைபெற்றது.

அதில் கலந்துக் கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அந்நாட்டு பிரதமர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் அவர் கூறுகையில், "ரஷ்யாவுக்கு எதிரான போரை முடிவுக்கு கொண்டு வர உக்ரைனுக்கு நீண்ட தூர ஏவுகணைகள் மற்றும் வெடிமருந்துகள் அதிகளவில் தேவைப் படுகிறது.

அதேவேளை, ஆயுத ஏற்றுமதி கொள்கையில் ஜப்பானின் கட்டுப்பாடுகளை உக்ரைன் புரிந்து கொள்கிறது" என தெரிவித் துள்ளார்.

அத்துடன், உக்ரைன்-ரஷ்யா போர் கடந்த 2 வருடங்களாக தொடர்ந்து நடைபெற்று வருகின்ற நிலையில் உக்ரைனுக்கு ஆதரவாக அமெரிக்கா, பல ஐரோப்பிய நாடுகள் பொருளாதார உதவிகளை செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# விண்வெளியில் அணு ஆயுதங்களை நிலைநிறுத்தும் எண்ணம் இல்லை

## ரஷ்ய ஜனாதிபதி புடின் தெரிவிப்பு



விண்வெளியில் அணு ஆயுதங்களை நிலைநிறுத்தும் எண்ணம் எங்களுக்கு இல்லை. அனைத்து சர்ச்சைகளுக் கும் முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் ரஷ்யாவின் நிலைப் பாட்டை ஜனாதிபதி புடின் கூறியிருந்தார்.

அண்மையில், ரஷ்யா, விண்வெளிக்கு அணுகுண்டு ஒன்றை அனுப்பும் முயற்சியில் இறங்கியுள்ளதாகவும், ரஷ்ய பொறியாளர்கள் விண்வெளிக்கு அனுப்புவதற்கான அணு ஆயுதம் ஒன்றை உருவாக்கி வருவதாகவும் வெள்ளை மாளிகை வட்டாரம் உறுதியாக நம்புவதாக செய்தி வெளியாகி அனைவரையும் பீதியில் ஆழ்த்தியிருந்தது.

மேலும், அந்த அணுவாயுதம் விண்வெளியிலுள்ள செயற்கைக்கோள்களை அழிப்பதற்காக உருவாக்கப்பட்டுள் ளதாகவும் அமெரிக்கா ரஷ்யா மீது குற்றம் சுமத்தியது.

தவிரவும், விண்வெளியில் அணு ஆயுதம் உட்பட பேரழிவு ஏற்படுத்தக்கூடிய எந்த விதமான ஆயுதங்களையும் நிலை நிறுத்தக்கூடாது என்ற ஒப்பந்தம் நடைமுறையில் உள்ளதா கவும், இந்த ஒப்பந்தத்தில் ரஷ்யா உள்பட 130 இற்கும் அதிக மான நாடுகள் கையெழுத்திட்டுள்ளதாகவும் அமெரிக்கா கூறியது.

அந்த ஒப்பந்தத்தினை மீறி, விண்வெளி திட்டங்களுக்கு அபாயத்தை ஏற்படுத்தும் வகையில் ரஷ்யா செயற்பட்டு வருவதாகவும், அமெரிக்கா ரஷ்யா மீது குற்றங்களை அடுக்கி வருகிறது.

விண்வெளிக்கு அணுவாயுதத்தினை செயற்கைகோள் வடிவில் அனுப்பவுள்ளதாக கூறிய அமெரிக்கா அது எந்த வகையானது என்ற விவரத்தை தெரிவிக்கவில்லை, ஆனால் அது அணுஆயுதம் சார்ந்தது என்ற தகவலை பரப்பி வருகிறது.

இந்நிலையில், அமெரிக்காவின் குற்றச்சாட்டை பகிரங்கமாக ரஷ்யா மறுத்துள்ளது, இது தொடர்பாக ரஷ்ய ஜனாதிபதி புடின் கூறுகையில், "இந்த விவகாரத்தில் எங்கள் நிலைப்பாடு தெளிவானது, வெளிப்படையானது விண்வெளியில் அணு ஆயுதங்களை நிலைநிறுத்தும் எண்ணம் எங்களுக்கு இல்லை." – என்றார்.

# புகலிடக் கோரிக்கையாளர்கள் பயணித்த படகு விபத்துக்குள்ளானதில் 9 பேர் பலி



லிபியாவில் இருந்து ஐரோப்பாவுக்கு புகலிடக் கோரிக்கை யாளர்களை ஏற்றிச் சென்ற படகொன்று துனீசியா கடற்பகு தியில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 9 பேர் உயிரிழந்துள் ளனர்.

பாகிஸ்தான், எகிப்து, சிரியா மற்றும் பங்களாதேஷைச் சேர்ந்த சுமார் 53 பேர் மேற்படி படகில் பயணித்துள்ளனர். அவர்களில் பலர் காணமற் போயுள்ளனர் எனவும் அவர்களை தேடும் பணியில் மீட்புப் படையினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின் றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் உயிரிழந்தவர்களில் 8 பேர் பங்களாதேஷைச் சேர்ந்தவர்கள் எனவும் ஒருவர் பாகிஸ்தானியர் எனவும் தெரியவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




# தமிழரசின் நெருக்கடிக்கு சுமுகத் தீர்வு காண்போம்!

## கட்சியின் மூத்த துணைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் நம்பிக்கை

**(எஸ்.நிதர்ஷன்)**

தமிழரசுக் கட்சிக்குள் இப்போது ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு கலந்துரையாடி சுமுகமான தீர்வைக் காண்போம்.

– இவ்வாறு தமிழரசுக் கட்சியின் மூத்த துணைத் தலைவரும் வடக்கு மாகாண அவைத் தலைவருமான சி.வி.கே.சிவஞானம் நம்பிக்கை தெரிவித்தார்.

யாழ் கல்வியங்காட்டிலுள்ள அவரது அலுவலகத்தில் நேற்று தாம் நடத்திய ஊடக சந்திப்பின் போது கட்சி விவகாரம் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலையே மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவி பேசுபொருளாக அமைந்துள்ளது. இந்த வருடம் தேர்தல் காலம் என்பதால் இப்போது அதைப் பற்றியே பலரும் பேசி வருகின்றனர்.

கட்சியின் தலைவர், செயலாளர் உட்பட நிர்வாகமொன்று தெரிவு செய்யப்படுகின்ற போது கட்சியின் அனைத்து பொறுப்புக்களும் தலைவரிடமே இருக்கும்.

ஆனாலும் தலைவரது பணிப்பிற்கமைய நிர்வாக கடமைகளை செயற்படுத்துகிற ஒருவராகவே செயலாளர் இருப்பார். அதனைவிடுத்து செயலாளர் தன்னிச்சையாக செயற்பட முடியாது என்றே கட்சி யாப்பிலும் இருக்கிறது.

எங்களது கட்சி யாப்பை பொறுத்த வரையில் ஆலோசனை கூறுவதும் வழிநடத்துவதும் தலைவர்தான். நிர்வாகத்தை செய்கிற ஒருவராகவே செயலாளர் பதவி இருக்கும்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் கட்சியின் அமைப்பு விதி அல்லது யாப்பின் விதி 7 அ(3) இன்படி பொதுச்சபையினால் தெரிவு செய்யப்படுவார்.

அமைப்பு விதி 13(ஆ) பொதுச் செயலாளரின் கடமைகள் மற்றும் பொறுப்புக்களை விவரிக்கிறது. இதன்படி, இவர் கட்சியின் பிரதம செயல் ஆற்றும் உத்தியோகத்தராவதுடன் கட்சியின் சகல கிளைகளை ஒருமுகப்படுத்தி இணைப்பதுடன் மத்திய அலுவலகத்திற்கு பொறுப்பாகவும் இருப்பார். மிகப் பிரதானமாக பொதுச் செயலாளர் எல்லா விடயங்களிலும் தலைவருக்கு உதவி செய்வதுடன் தலைவரோடு ஆலோசித்து கட்சியின் கருமங்களை நடத்துவார்.

விதி 9(அ)வின்படி கட்சியின் முதல்வர் தலைவரே. இதன்படி நிறைவேற்று அதிகாரம் தலைவருக்குரியது. விதி 13(அ)02 இன்படி பொதுச் செயலாளருக்கும் இணைப் பொருளாளருக்கும் கட்சியை நடத்தும் விடயத்தில் ஆலோசனை கூறுவதும் வழி நடத்துவதும் தலைவரின் கடமையும் அதிகாரமும் ஆகும்.

இவற்றின்படி பொதுச் செயலாளர் ஒரு நிர்வாக அதிகாரியே தவிர தனித்துவமான நிறைவேற்று அதிகாரம் கொண்டவரல்லர் என்பது தெளிவு.

பொதுச் செயாலளர் ஒருவர் தாமாக பதவி விலகினாலோ, மத்திய செயற்குழுவினால் பதவி நீக்கம் செய்யப்பட்டாலோ அல்லது மரணித்தாலோ பதவி வறிதாக்கப்பட்டு வெற்றிடமாகும்.

விதி 13 (ஈ) 02 இன்படி பொதுச் செயலாளர் தமது கடமைகளை நிறைவேற்ற முடியாதவிடத்து துணைச் செயலாளர் அவரது கடமைகளை பதில் கடமை மூலம் நிறைவேற்றுவார். இது ஒரு நடைமுறை ஒழுங்காகும்.

எனினும் பொதுச் செயலாளர் பதவி வறிதாக்கப்பட்டு வெற்றிடமானால் அது விதி 13(உ)வின்படி மத்திய செயற்குழுவினால் நிரப்பப்படும். வெற்றிடம் பொதுச் சபையினால்தான் நரப்பப்படும் என்ற பரவலாக கூறப்படும் கருத்து தவறானது.

மேலும் 2024 ஆம் ஆண்டு தேர்தல்கள் ஆண்டாக இருப்பதால் தேசிய பட்டியல் போன்ற விடயங்களில் தனித்து அதிகாரம் உள்ளவர் என்பதால் இப்பதவி முக்கியத்துவம் பெறுவதாக கூறுவதும் தவறு.

இதனை இங்கு நான் கூறுகிறேன் என்றால் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தேசியப்பட்டியல் நியமனத்தை கட்சித் தலைவருடன் கலந்தாலோசிக்காமல் செயலாளர் வேறு ஒருவருக்கு வழங்கினார் என்ற குற்றச்சாட்டுக்கள் இருக்கின்றன.

அதன் காரணமாக செயலாளர் பதவி வகிப்பது தொடர்பில் பலதரப்பட்ட பார்வைகள், எண்ணங்களும் ஏற்பட்டு இருக்கலாம். உண்மையில் கட்சியில் பிரதேசவாதம் அல்லது பிரிவு, பிளவு ஏற்படாமல் இருக்க வேண்டும் என்பதாலேயே இந்த தேசியபட்டியல் நியமனத்தை பெரியதொரு பிரச்சினையாக யாரும் கருதவில்லை.

இதனாலேயே செயலாளர் பதவி அல்லது நியமனம்

தொடர்ச்சி▼

# தமிழரசின் நெருக்கடிக்கு சுமுகத் தீர்வு காண்போம்!

தொடர்ச்சி▲

அல்லது தெரிவு என்று கூறிக் கொண்டு அதற்கு முக்கியத்துவம் கொடுத்து விவாதப் பொருளாக்கி பேசிக் கொண்டிருக்கிறோம்.

ஆகவே கட்சியின் அனைத்து விடயங்களுக்கும் பொறுப்பானவரும் தீர்மானமெடுப்பவரும் தலைவர்தான். இதுதான் நடைமுறை. கட்சித் தலைவரை மீறி யாரும் செயற்பட முடியாது என்பதுதான் யாப்பிலும் தெளிவாக கூறப்பட்டுள்ளது.

எமது கட்சியைப் பொறுத்த வரையில் நீண்ட நெடிய பாரம்பரியமான ஒரு கட்சியாக இருக்கிறது. இந்தக் கட்சி பதவிகளுக்கு முன்னெப்போதும் போட்டி என்ற நிலை வந்த்தில்லை. ஆனால் இப்போது போட்டியை எதிர்கொண்டதால்தான் பல்வேறு பிரிவினைகள் ஏற்பட்டுள்ளன. கட்சியின் இன்றைய நிலைமைள் மிகவும் வருத்தமளிப்பதாக உள்ளது.

ஜனநாயகம் என்ற போர்வையில் போட்டிகள் ஏற்படுவது பிளவுகளையே ஏற்படுத்தும். எனவே போட்டி இருந்தாலும் பிளவுகள் மேலோங்குவது தவிர்க்கப்பட வேண்டியது அவசியம். ஆகையனால்

போட்டி இல்லாத நிலைமையை ஏற்படுத்த வேண்டும்.

எமது கட்சி ஒருவர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கிற போது அதற்கு எதிராக நீதிமன்றம் போனாலும் பதவி நிலைகளுக்கு நீதிமன்றுக்கு போகவில்லை. ஆனாலும் இப்போது நீதீமன்றம் வரை சென்றிருப்பது வருந்தத்தக்கது. உண்மையில் ஜனநாயகம் என்று சொல்லிக் கொண்டு இவ்வாறான நிலைமைகள் ஏற்படுவது தவிர்க்கப்பட வேண்டும்.

இனிமேல் கட்சி எந்த பதவிக்கும் போட்டி இருக்கு மானால் அதில் நான் பங்குகொள்ள மாட்டேன். அதனைத் தவிர்த்து கொள்வேன். பலராலும் பரிகசிக்கப்படு கின்ற நிலைக்கு வந்துள்ளோம். இதில் யார் சரி, பிழை என்பறகப்பால் போட்டிகள் தவிர்க்கப்பட வேண்டும். கட்சிக்குள் பிளவுபட விடாமல் செயற்பட வேண்டும்.

எங்களது கட்சி விவகாரம் தற்போது நீதிமன்றம் வரை சென்றுள்ளமையால் இன்றைய நிலைமையில் மிக இக்கட்டான கட்டத்திலேயே கட்சி இருக்கிறது.

இதனை யாரும் மறுக்க முடியாது. இந்த நிலைமை தொடர்வது கட்சியை மேலும் பாதிக்கும் என்பதுதான் உண்மை.

ஆனாலும் இந்த நிலை தொடர்வதற்கான சாத்தியங்கள் குறைவாகவே இருக்கின்றன. ஏனெனில் இணக்கப்பாட்டிற்கு வருவதற்கான வாய்ப்புக்கள் தற்போது இருப்பதாகவே நம்புகிறேன். எனினும் அடுத்து நடைபெறவுள்ள பேச்சுக்களின் போது இணக்கப்பாடில்லாத நிலை தொடர்ந்தால் கட்சி பிளவுபடுமோ என்ற அச்சமும் இருக்கிறது.

மேலும் நடைபெற்ற கூட்டத்திலும் கூட்டத் தெரிவுகளிலும் சிறு தவறுகள் நடந்துதான் இருக்கின்றன. அதற்காக யாரும் நீதிமன்றம் செல்ல வேண்டும் என்றில்லை. உட் கட்சி விவகாரங்களை கட்சிக்குள்ளேயே கலந்து பேசி சுமுகமான முறையில் தீர்வை ஏற்படுத் தியிருக்கலாம்.

கட்சியின் இன்றைய நிலைமை தெற்கிற்கு மிக மகிழ்ச்சி. கட்சிக்குள் இப்போது ஏற்பட்டிருக்கிற பிரச்சனைகளுக்கு யாரின் தூண்டுதல் ஏதோ இருக்கிறு என்பதை மறுக்க முடியாது. ஒன்றாக இருந்தவர்கள் இப்போது ஏன் இப்படி செயற்படுகிறார்கள் எனத் தெரியவில்லை.

இந்தநிலை தொடருமானால் கட்சி பிளவுபடும் நிலை ஏற்படும் ஆபத்து உள்ளது. அது ஆரோக்கிம் அல்ல. பாரம்பரிய கட்சியாக இருக்கிற இந்த கட்சியில் சில தவறுகள் ஏற்பட்டு இருக்கின்றன. அவற்றைத் திருத்தி கொண்டு சென்றால் கட்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லலாம்.

ஜனநாயகம் பற்றி பேசுகிற எந்த பெரிய கட்சியா லாவது இப்படி ஜனநாயகம் இருக்கின்றதா? ஆனால் எங்கள் கட்சியில் பெரிய ஜனநாயகம் இருக்கு என்று பேசி கொண்டு ஜனநாயக அழிவுக்குக் கட்சியைக் கொண்டுவந்து விட்டுள்ளனர்.

இது சிவில் வழக்கு. இது எவ்வளவு காலம் இழுபடும் என்று சொல்லத் தெரியவில்லை. ஆகையனால் ஏதோவொரு வகையில் உடன்பாட்டுக்கு வரவேண்டும். தற்போது கட்சியில் இரண்டு அணிகளல்ல, பல அணிகள் இருக்கின்றன.

ஜனநாயக ரீதியான கட்சி என்றால் முரண்பாடுகள் இருக்கத்தான் செய்யும். ஆனால் அந்த முரண்பாடுகள் எப்போதும் ஆரோக்கியமானவையாக அமைய வேண்டும். முரண்பாடுகள் என்பது எங்கள் கட்சியில் மட்டுமல்ல எல்லா இடமும் இருக்கின்றனதானே?

எனவே முரண்பாடுகளை களைந்து, சரி பிழைகளை ஏற்றுக் கொண்டு, சுமுகமாகப் பேசித் தீர்க்க வேண்டும். விடாக்கண்டன் கொடாக்கண்டனாக செயற்படாமல் விட்டுக் கொடுத்து செயற்பட வேண்டும்.

எங்களுடைய கட்சியின் தலைவர் சிறிதரன்தான். அவரே இந்த பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளலாம். அதே போன்று கட்சி நலன் கருதி நீதிமன்றம் செல்வதையும் மற்றைய தரப்பினர்கள் தவிர்த்திருக்கலாம். அவ்வாறு செல்லாமல் விட்டிருந்தால் என்னைப் பொறுத்தவரையில் அன்றைய கூட்டத்தின் பிரகாரம் தலைவர், செயலாளர் தெரிவில் இணக்கப்பாட்டை ஏற்படுத்தியிருக்கலாம்.

ஆகவே எல்லாவற்றிற்கும் மனம் வேண்டும். தன்னலம், சுயநலம் பற்றிக் கதைத்தால் எதுவும் கஷ்டம்.

பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்க்க துணிவு, தைரியம் வேண்டும். வெறுமனே கற்பனையில் கற்பிதம் செய்வதுதான் இந்த நிலை.

எனவே எதிர்வரும் 23 ஆம் திகதி ஒரு கலந்து ரையாடல் இருக்கிறது. இதில் பேசித் தீர்த்து சுமுகமான தீர்வை ஏற்படுத்தலாம். சரி, பிழைகளுக்கப்பால் கட்சி நலன் கருதி அனைவரும் செயற்பட வேண்டியது அவசியம்.

இதேவேளை கட்சிக்குள் போட்டியை உருவாக்கியவர் குகதாசன்தான். கட்சியின் இந்த நிலைக்கு அவருக்கு பெரிய பங்கு உள்ளது. திருகோணமலையில் எடுக்கப் பட்ட தீர்மானத்தை ஏற்றுக் கொள்வதில் எனக்கு உடன் பாடு இருக்கிறது. அதற்கமைய பேசி சுமுகமான தீர்வை ஏற்படுத்தலாம்.

கட்சியின் தலைவர் உள்ளிட்ட சகல பதவிகளுக்குமான தெரிவு வாக்கெடுப்பு போட்டி மூலம் இடம்பெறுவது முழுமையாக தவிர்க்கப்படல் வேண்டும் என்ற எனது ஆணித்தரமான கருத்தை நான் பதிவு செய்ய விரும்புகிறேன். அவ்வாறுதான் கடந்த 74 வருடங்களாக நிகழ்ந்து வருகின்றது.

மேலும், இம்முறை இடம்பெற்ற வாக்கெடுப்பு தெரிவு மூலம் கட்சி சில கூறுகளாக பிளவுபட்டுள்ளமையை யாரும் மறுதலிக்கமுடியாது. இந்த விடயத்தில் ஒரு பிரபல தேசிய பத்திரிகையின் நீண்ட கால ஆசிரியரான வீரகத்தி தனபாலசிங்கம் தமது கட்டுரை ஒன்றில் –

“கட்சியின் தலைவரை ஏகமனதாகவே தெரிவு செய்யும் பாரம்பரியத்தை தந்தை செல்வா ஏன் உறுதி யாகக் கடைப்பிடித்து வந்தார் என்பது இப்போது எல்லோ ருக்கும் புரியும். தலைவர் பதவிக்கு அந்த ஆனானப்பட்ட அமிர்தலிங்கமும் இராசதுரையும் போட்டி போடத் தலைப் பட்டபோது அவர்களைச் சாதுரிய மாகக் கையாண்ட தந்தை செல்வா எங்கே.....” என்று கூறிய கருத்துடன் நான் முழுமையாக உடன்படுகிறேன். – என்றார்.

# போதை பொருள் வியாபாரி உட்பட 3 பேர் மட்டக்களப்பு வாழைச்சேனையில் கைது!

(கனகராசா சரவணன் )

மட்டக்களப்பு வாழைச்சேனையில் போதை வியாபாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பிரபல போதைப் பொருள் வியாபாரி ஒருவர் உட்பட 3 பேரை நேற்றைய புதன்கிழமை அதிகாலை வாழைச்சேனைப் பிரதான வீதியில் வைத்து ஐந்தரை கிராம் 200 மில்லிகிராம் ஐஸ் போதை பொருளுடன் மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவினர் கைது செய்தமையுடன் மோட்டர் சைக்கிள் ஒன்றையும் கைப்பற்றி ஒப்படைத்துள்ளனர் என வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றையடுத்து குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் டி.எஸ்.எஸ்.கே. தெலங்காவலகே தலைமையிலான பொலிஸ் குழுவினர் நேற்று அதிகாலை 4 மணிக்கு வாழைச்சேனை பிரதான வீதியில் கண்காணிப்பில் ஈடுபட்டனர்.

அங்கு போதை பொருளுக்கு அடிமையான இருவர் போதை பொருள் வாங்குவதற்குக் காத்துக் கொண்டிருந்தனர் என்றும்,. மோட்டார் சைக்கில் அங்கு சென்ற வியாபாரி விற்பனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது மாறுவேடத்தில் கண்காணிப்பில் இருந்த பொலிஸார் அவர்களைச் சுற்றிவளைத்து மடக்கிபிடித்துக் கைது செய்தனர் என்றும் கூறப்பட்டது.

இதன் போது வியாபாரியிடம் இருந்து 4 கிராம் ஐஸ்போதை பொருளையும், ஏனைய இருவரிடமிருந்து ஒன்றரைக் கிராம் , மற்றும் 200 மில்லிக்கிராம் ஐஸ்போதை பொருள்களையும், மோட்டர்சைக்கிள் ஒன்றையும் கைப்பற்றி அவர்கள் தம்மிடம் ஓப்படைத்துள்ளனர் எனவும், இவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## அமைச்சரவை செயலாளராக ஜே.பெர்னாண்டோ நியமனம்


ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதிவிசேஷமானது

பகுதி I : தொகுதி (I) - பொது

சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

EOG 02-0144

அமைச்சரவை செயலாளராக டபிள்யூ.எம்.டி.ஜே. பெர்னாண்டோ நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 14 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டு அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 22 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டமூலம் நாடாளுமன்றில் நேற்றுச் சமர்ப்பிக்கப்பட்டது


22 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டமூலம் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பிலவினால் நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

தனிநபர் பிரேரணையாக அவர் இதனை முன்வைத்துள்ளார்.

மாகாண சபைகளில் இருந்து பொலிஸ் அதிகாரங்களை நீக்குதல் உள்ளிட்ட பல விடயங்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் மூலம் மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த பொலிஸ் அதிகாரங்களை நீக்குவது தொடர்பில் நாடாளுமன்றத்தில் சட்டமூலம் சமர்ப்பிக்கப்படுவது இதுவே முதல் தடவையாகும்.



# உளுந்து,பயறு,சோளம், குரக்கனுக்கு விசேட வர்த்தகப் பண்ட வரி விதிப்பு!

### விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியீடு

உளுந்து, பயறு, கௌபீ, சோளம் மற்றும் குரக்கன் ஆகியவற்றுக்கு விசேட வர்த்தகப் பண்ட வரியை விதித்து நிதி அமைச்சு விசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை வெளியிட்டுள்ளது.

இந்த பொருள்களை விவசாய அமைச்சின் அனுமதியுடன் மாத்திரமே இறக்குமதி செய்ய முடியுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, அனைத்து உளுந்து வகைகளுக்கும் இறக்குமதியின்போது, ஒரு கிலோ கிராமுக்கு 300 ரூபா வரி விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பயறு, கௌபீ, மற்றும் குரக் கன் எனப்பவற்றுக்காகவும் 300 ரூபா விசேட பண்ட வரியாக விதிக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.



# திருக்கோணேஸ்வர ஆலயப் பரிபாலன சபை செயற்படுவதற்குத் தடை விதித்து கட்டாணை

(அப்துல்சலாம் யாசீம்)

திருக்கோணேஸ்வர ஆலய பரிபாலன சபை உறுப்பினர்கள் அச்சபையின் உறுப்பினர்களாக செயற்படுவதைத் தடைசெய்யும் வகையில் திருகோணமலை மாவட்ட நீதிமன்றம் நேற்று இடைக்காலத் தடைவிதித்து கட்டாணை ஒன்றைப் பிறப்பித்துள்ளது.

திருகோணமலை மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா முன்னிலையில் நேற்று இது தொடர்பான வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது 14 நாள்களுக்கு செயற்படும் வகையில் மேற்குறித்த இடைக்கால கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.



வழக்கில் முன்னிலையான சட்டத்தரணி சண்முகம் தில்லைராசனினால் முன்வைக்கப்பட்ட சமர்ப்பணத்தை அடிப்படையாகக் கொண்டு இந்தக் கட்டாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நம்பிக்கைப் பொறுப்பு கட்டளைச் சட்டத்தின் பிரிவு 101(2) இல் உள்ள ஏற்பாடுகள் மற்றும் அதே சட்டத்தின் ஏனைய பொதுவான ஏற்பாடுகளுக்கு அமைய பொதுச்சபையின் ஆயுட்கால உறுப்பினர் செ.க.விஜயநாதன், முன்னாள் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபை உறுப்பினரும் பொதுச்சபையின் ஆயுட்கால உறுப்பினருமான சி.ஜெயசங்கர் ஆகியோரால் கோணேஸ்வர ஆலய நம்பிக்கை பொறுப்பாளர்கள் சபையின் தலைவர், செயலாளர், பொருளாளர் உட்பட 29 பேரை எதிர்மனுதாரர்களாகவும், கு.ஹேமச்சந்திரா, து. தவசிலிங்கம் ஆகியோரை 2வது, 3வது மூல எதிர் மனுதாரர்களாகவும் குறிப்பிட்டு தாக்கல் செய்யப்பட்ட வழக்கே நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அப்போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அத்துடன் திருகோணமலை பிரதேச செயலக செயலாளர் அல்லது நகர சபையின் செயலாளரை தலைவராகவும் கொண்ட ஏழுபேரை உள்ளடக்கிய இடைக்கால நிர்வாக சபையை நியமிப்பதற்கும், அந்த இடைக்கால நிர்வாக சபைக்கு ஆலோசனை வழங்குவதற்காக 5 பேர் கொண்ட உறுப்பினர்களை உள்ளடக்கியதான ஆலோசனை சபை ஒன்றை அமைப்பதற்கும் வழி செய்யும் கட்டளையும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# கடற்படையின் பணிக்குழாம் பிரதானியாக ரியர் அட்மிரல் பிரதீப் ரத்நாயக்க நியமனம்

இலங்கைக் கடற்படையின் புதிய பணிக்குழாம் பிரதானியாக ரியர் அட்மிரல் பிரதீப் ரத்நாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

ரியர் அட்மிரல் பிரதீப் ரத்நாயக்க, மாத்தளை சென். தோமஸ் கல்லூரியின் பழைய மாணவர் ஆவார்.

அவர் 1987 இல் இலங்கை கடற்படையின் நிறைவேற்றுப் பிரிவில் கடேட் அதிகாரியாக இணைந்தார்.



# சில மாவட்டங்களில் அதிக வெப்பம் நிலவும்: வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை

வடமேல் மாகாணத்திலும் சில மாவட்டங்களிலும் அதிக வெப்பம் நிலவும் என எச்சரிக்கை அறிவித்தல் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வடமேல் மாகாணம் மற்றும் கம்பஹா, கொழும்பு, ஹம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை மாவட்டங்களுக்கு இந்த எச்சரிக்கை அறிவித்தல் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சில இடங்களில் மனித உடலில் உணரப்படும் வெப்பம் அவதான மட்டத்தில்தொடரும்எனஎதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.



இந்நிலைமையில் இருந்து பொது மக்கள் தம்மை பாதுகாத்துக் கொள்வதற்காக திணைக்களம் அறிவுறுத்தல்களையும் வெளியிட்டுள்ளது.

போதுமான தண்ணீர் அருந்துதல், அதிக சோர்வை ஏற்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபடாதிருத்தல், வெள்ளை அல்லது வெளிர் நிற ஆடை களை அணிதல், நிழலான இடங்களில் தங்கியிருத்தல் என்பனவற்றை பின்பற்றுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

# இது வரையில் அமைத்த ஆணைக்குழுக்கள் போதும் முதலில் அவற்றின் அறிக்கைகளை வெளியிடுங்கள்!

## 66 ஆண்டுகளில் 36 ஆணைக்குழுக்கள் மனித உரிமைகள் குறித்து விசாரிக்க

(கனகராசா சரவணன்)

இலங்கையில் மனித உரிமைகள் தொடர்பாக விசாரணைக்காக 1956 தொடக்கம் 2022 ஜுன் 6 ஆம் திகதி வரை 36 ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டும் 14 ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் ஒருபோதும் வெளியிடப்படவில்லை. எனவே புதிய உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவை உருவாக்குவதற்கு முன், முன்னைய ஆணைக்குழுக்களை அங்கீகரிக்க வேண்டும். இதுவரை வெளியிடப்படாத அனைத்து அறிக்கைகளையும் ஜனாதிபதி இணயத்தளத்தில் வெளியிட வேண்டும் என அரசாங்கத்திடம் 4 அரசசார்பற்ற நிறுவனங்கள் கூட்டாக இணைந்து வேண்டுகோள் விடுத்துள்ளன.

பெண்கள் பிரிவு வலையமைப்பு, மனித உரிமைக்கும் வளர்ச்சிக்குமான நிலையம், பன்னாட்டு உண்மைக்கும் நீதிக்குமான திட்டம், காணாமல் போனவர்களின் குடும்பங்கள் , ஆகிய 4 அமைப்பினர் கூட்டாக இணைந்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

இலங்கையில் பாரதூரமான மனித உரிமைமீறல்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்கு அமைக்கப்பட்ட அரசாங்க ஆணைக்குழுக்களின் எண்ணிக்கை பாதிக்கப்பட்ட இலங்கையர்களால் கணக்கு வைக்க முடியாத எண்ணிக்கைகளைத் தாண்டியுள்ளது. இருந்தும் பிறிதொரு ஆணைக்குழு உருவாக்கப்படவுள்ளது.

உண்மை, ஐக்கியம் மற்றும் நல்லிணக்க ஆணைக்கு எனப்படும் இப்புதிய ஆணைக்குழு, உண்மையைக் கண்டறிவதற்காக சிறிலங்கா அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட குறைந்தது 36 ஆணைக்குழுக்களைக்கொண்ட வரிசையில் புதிதாக இணைந்துள்ளது. எனினும், நீதியும் பொறுப்புக்கூறலும் மழுப்பலானதாகவே தொடர்ந்தும் இருந்துவருவதாக பாதிக்கப்பட்டவர்கள் கூறுகின்றனர்.

நடவடிக்கை எடுக்கக்கோரி, காணாமற்போனவர்களின் குடும்பங்கள் துணிகர வீதிப்போராட்டங்களை ஆரம்பித்து இன்று எட்டு ஆண்டுகள் கடந்துவிட்டன. தங்கள் அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது என்பதைத் தெரிந்துகொள்ளாமலேயே 240 இற்கும் மேற்பட்ட வயது முதிர்ந்த உறவினர்கள் உயிரிழந்துள்ளனர்.

அரசாங்கத்தால் முன்மொழியப்பட்ட இப்புதிய உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவை நிராகரித்து 37 குடியியல் சமூக அமைப்புக்களும் 19 செயற்பாட்டாளர்களும் ஏற்கனவே வெவ்வேறு அறிக்கைகளை வெளியிட்டுள்ளனர்.

கடந்தகாலப் பொறிமுறைகளின் மோசமான தோல்வி, ஆவணங்களைப் பகிரங்கப்படுத்தத் தவறியமை, புதிய கட்டமைப்பிற்கான போதுமான அதிகாரமின்மை, சர்வதேச பிரதிநிதிகளை ஈடுபடுத்தாமை, பொருத்தமான நீதித்துறைப் பொறிமுறையின்மை, மற்றும் முந்தைய ஆணைக்குழுக்களின் நீண்ட பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தத் தவறியமை ஆகியவற்றை அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சிறிலங்கா அரசாங்கம் 1956 நவம்பர் முதலாம் திகதி கிழக்கு மாகாணத்தில் குடியியல் கலவரம் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளுவதற்கு முதலாவது ஆணைக்குழு அமைக்கப்பட்டது. அதனை தொடர்ந்து 2022 மார்ச் 31 இற்கும் மே 15 இற்கும் இடையில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இடம்பெற்ற தீவைப்பு, கொள்ளை மற்றும் களவு ஆகியை அனைத்து வடிவ நாசவேலைகளுக்கும் ஆளாக்கப்பட்ட அல்லது இழக்கப்பட்ட தனிநபர்களதும், நிறுவனங்களமும், அமைப்புக்களதும், கூட்டு நிறுவனங்களதும் சொத்துக்கள் மற்றும் ஆளிழப்புக்கள் தொடர்பான முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்கான விசாரணைக்கா 36 ஆவது ஆணைக்குழு அமைக்கப்பட்டது.

இந்த 36 ஆணைக்குழுக்களில் 14 ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் ஒருபோதும் வெளியிடப்படவில்லை என்பது அதிர்ச்சியானது என்பதுடன் பெரும்பாலான ஆவணங்கள் அரசாங்க இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள போதிலும், வெறும் ஒருசில ஆணைக்குழுக்களின் அறிக்கைகளே அவ்விணையத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. உண்மையில், கடந்த கால ஆணைக்குழுக்களால் வெளியிடப்பட்ட 22 அறிக்கைகளில், வெறும் 11 அறிக்கைகளின் பிரதிகள மட்டுமே எம்மால் கண்டுபிடிக்கமுடிந்தது.

மேலும், கடந்த காலங்களில், என்ன நடந்தன என்பதை நிறுவுவதற்கான விசாரணை வடிவங்களே மேற்கொள்ளப்பட்டன, மாறாக, குற்றத்திற்குக் காரணமானவர்களைப் பொறுப்புக்கூறவைப்பதற்காக அல்ல. இது, அதே நபர்களால் திரும்பத்திரும்ப பெரும் அநீதிகள் மேற்கொள்ளப்பட வழிவகுத்தது.

சிறிலங்கா ஜனாதிபதி அண்மையில் பரிந்துரைத்துள்ள பொறுப்புக்கூறல் முயற்சி தொடர்பான கடுமையான கவலைகளை இது எழுப்புகின்றது. ஜனாதிபதியின் இணையத்தளத்தில் கடந்தகால ஆணைக்குழுக்களின் அறிக்கைகளைப் பதிவேற்றம் செய்வதன் மூலமாக அவற்றின் உள்ளடக்கங்களை அங்கீகரிப்பதே உண்மையை நோக்கிய முதலாவது படியாக அமையும்.

நேர்மைத்தன்மையுடன் செயற்படுவதற்கு, படலந்த சித்திரவதைக்கூடத்தில் நடந்த சித்திரவதைகளும் தடுத்துவைப்புக்களும் ரணில் விக்கிரமசிங்கவிற்குத் தெரியாமல் நடந்திருப்பது சாத்தியமில்லை என்று கூறும் பத்தலந்த ஆணைக்குழுவின் அறிக்கை போன்ற, ஜனாதிபதியின் பெயரையும் உள்ளடக்கும் அறிக்கைகளையும் இதில் உள்ளடக்கவேண்டும்.

இதுவரை வெளியிடப்படாத அறிக்கைகளை வெளியிடும்படியும், கடந்த கால அறிக்கைகள் அனைத்தையும் ஜனாதிபதி இணயத்தளத்தில் வெளியிடும்படியும் சிறிலங்கா அரசாங்கத்தை நாங்கள் வேண்டிக் கொள்கிறோம் என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# மலையகத் தமிழர்கள் பற்றிய நிகழ்வு ஞாயிறன்று யாழ் பொது நூலகத்தில்

(பிரபாகரன் டிலக்சன்)

மலையகத் தமிழர்கள் இலங்கைக்கு வந்தமையின் 200 ஆண்டுகளின் நிறைவினை ஒட்டி, இலக்கியம், திரைப்படம், நடன ஆற்றுகை என்பவற்றை உள்ளடக்கிய ஒரு நாள் நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணப் பொதுநூலக கேட்போர்கூடத்தில் இடம்பெறவுள்ளது.

மலையகத் தமிழ் மக்களின் வாழ்வியல், அனுபவங்கள், இலட்சியங்கள், போராட்டங்கள் என்பவற்றினைப் பற்றிப் பேசும் இலக்கியங்கள் மற்றும் ஏனைய கலை வடிவங்கள் மீது கவனத்தைக் குவிக்கும் வகையில் இந்த நிகழ்ச்சி வடிவமைக்கப்பட்டுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இந்த நிகழ்விலே இலக்கியம், திரைப்படம், நடனம் போன்ற துறைகளிலே ஆர்வம் கொண்டோர், பொதுமக்கள் அனைவரினையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்புவிடுத்துள்ளனர்.





# ஈரான் வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி ரணிலுடன் சந்திப்பு

உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்த ஈரான் வெளிவிவகார அமைச்சர் ஹுசைன் அமீர் – அப்துல்லாஹியன் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவை ஜனாதிபதி அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, காஸா எல்லைப் பகுதிகளில் போர் நிறுத்தத்தை அமுல்படுத்தி சமாதான ஒப்பந்தத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டியதன் அவசியத்தை ஈரான் வெளிவிவகார அமைச்சரிடம் வலியுறுத்தினார்.

அந்தச் சமாதான ஒப்பந்தம் ஒருதலைபட்சமாக இருக்க கூடாதெனவும் இரு தரப்பும் ஏற்றுக்கொள்ள கூடிய வகையில் ஏற்படுத்திகொள்ளப்பட வேண்டும் எனவும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

மேலும், இஸ்ரேல் அரசாங்கத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி, ஐந்து வருடங்களுக்குள் பாலஸ்தீன அரசாங்கத்தை அமைக்க வேண்டியது அவசியமெனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இந்து சமுத்திரத்திற்குள் பெர்சிய வளைகுடா நாடுகளுக்கு வழங்கப்படும் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, வலயத்தின் கப்பல் போக்குவரத்துச் சுதந்திரத்தை பாதுகாப்பதற்கு இலங்கை அர்ப்பணிக்கும் என்றும் தெரிவித்தார்.

இதன்போது இருநாடுகளுக்கும் இடையிலான கலாசாரத் தொடர்புகளை பலப்படுத்திக்கொள்வதன் அவசியத்தை சுட்டிக்காட்டிய ஈரான் வெளிவிவகார அமைச்சர் ஹுசைன் அமீர் – அப்துல்லாஹியன், இலங்கையின் சுற்றுலா வர்த்தகத்தை மேம்படுத்துவதற்காக ஈரான் அர்ப்பணிப்புடன் செயற்படுமெனவும் உறுதியளித்தார்.

ஈரான் – இலங்கை பொருளாதார ஒத்துழைப்புகளின் புதிய அத்தியாயத்தை திறக்கும் வகையிலான செயற்பாடுகளை இலங்கை முன்னெடுத்து வருவதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதன்போது தெரிவித்தார்.

இதன்போது, ஜனாதிபதியின் செயலாளர் சமக் ஏக்கநாயக்க மற்றும் சர்வதேச அலுவல்கள் தொடர்பான ஜனாதிபதியின் பணிப்பாளர் தினுக் கொலம்பகே உள்ளிட்டவர்களும் கலந்துகொண்டனர்.





# ஒக்டோபரில் அதிகரிக்கப்பட்ட மின் கட்டணம் குறைக்கப்படும்

## அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவிப்பு

கடந்த ஒக்டோபர் மாதத்தில் அதிகரிக்கப்பட்ட மின்சாரக் கட்டணம், அதே அளவில் குறைக்கப்படுமென மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதற்கமைவாக வீடுகள், மத வழிபாட்டுத்தலங்கள், அரச நிறுவனங்கள் மற்றும் சுற்றுலா ஹோட்டல்களுக்கு அதிகரிக்கப்பட்ட மின் கட்டணம், அதே வீதத்தில் குறைக்கப்படுமென அமைச்சர்



ரஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

கடந்த ஒக்டோபரில் வீடுகள், மத வழிபாட்டுத்தலங்கள், அரச நிறுவனங்களுக்கு 18 வீத மின் கட்டண அதிகரிப்பும் தொழில்துறை மற்றும் சுற்றுலா ஹோட்டல்களுக்கு 12 வீத அதிகரிப்பும் அரச நிறுவனங்களுக்கு 24 வீத மின் கட்டண அதிகரிப்பும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இந்த நிலையில், குறித்த மின் கட்டண அதிகரிப்பு வீதத்தை முற்றாக இல்லாமல் செய்து, மின் கட்டணக் குறைப்பை மேற்கொள்ளவுள்ளதாக இலங்கை மின்சார சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்ததாக அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.




# சமஷ்டியை நீக்கிய தமிழரசுக் கட்சி

■ வி.எஸ்.சிவகரன்

அரசியல் என்பது அயோக்கியனின் கடைசிப் புகலிடம் என்றார் மாக்கியவல்லி. அந்தக் கூற்றை இத்துணை ஆண்டுகள் கடந்தும் அரசியல் வாதிகள் நிரூபித்த வண்ணமே உள்ளனர்.

தமிழர்களின் அரசியல் செல்நெறியை உருவாக்கியதும் கோட்பாட்டுச் சித்தாந்தத்தை திடமாக – தடம் மாறாத நோக்கு நிலையில் – தோற்றுவித்ததுமான தமிழரசுக்கட்சியும் பதவி மோகத்தாலும் சந்தர்ப்பவாத சுயநலத்தாலும் தடுமாறுகிறது .

1976/05/14 இல் இருந்து தமிழரசுக் கட்சி தமிழர் விடுதலைக் கூட்டணியில் ஓர் அங்கம் ஆகியதன் பின்னர் 10/01/2010ஈல் யாழ்ப்பாணம் இளங்கலைஞர் மண்டபத்தில்தான் தனது 13 ஆவது தேசிய மாநாட்டை பகிரங்கமாக நடாத்தியது.

அதில் இருந்து யாப்பு மீறல் என்பது தொடர்கிறது.

இதற்கிடையில் 27/04/2008 யாழ்ப்பாணம் கட்சி அலுவலகத்திலும், 23/08/2008 கொழும்பிலும் உள்ளக ரீதியாக நடைபெற்ற கட்சிக் கூட்டங்களில் யாப்பு விதி 02 (அ) வில் 'சமஷ்டி' எனும் சொல்லை நீக்கிவிட்டு 'இணைப்பாட்சி'யின் என்ற சொல்லை பதிலீடு செய்துள்ளனர். இது மட்டுமன்றி வேறு பல திருத்தங்களும் செய்துள்ளனர். அத்திருத்தங்களை 26/05/2011 மாவை சேனாதிராஜா பொதுச் செயலாளராக இருந்த போது – மஹிந்த தேசப்பிரிய தேர்தல் ஆணையாளராக இருந்த சமயம் – தேர்தல் திணைக் களத்தில் கையளிக்கப்பட்டு, மஹிந்த தேசப்பியவால் கையொப்பமிட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

ஆனால் தற்போது தேர்தல் திணைக்கள இணையத்தில் மேற்கூறிய திருத்தம் உடைய யாப்பு இல்லை. 25/09/2020 ல் வழங்கப்பட்ட யாப்பே காணப்படுகிறது. கட்சி தலைமை அலுவலகத்திலும் கட்சியின் முக்கிய நபர்கள் என கூறப்படுபவர்கள் இடத்திலும் இதை விட வேறு விதமான யாப்புகள் காணப்படுகின்றன . வேறு சிலர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாப்பை தமிழரசுக் கட்சியின் யாப்பாக நினைத்து வியாக்கியானம் செய்கின்றனர்.

ஆகவே கட்சியிடம் தெளிவான யாப்பும் இல்லை. அதைப்பற்றி அவர்கள் ஆழமாகச் சிந்தித்தவர்களும் அல்லர். பிரபல சட்ட வல்லுநர்கள் என்று தம்மை வெளிக்காட்டிக் கொள்ளக்கூடிய பலர் கட்சியில் பல்வேறு விதமான பொறுப்பில் இருந்துள்ளனர். தற்போதும் இருக்கின்றனர். குறிப்பாக ஜனாதிபதி சட்டத்தரணிகளான சுமந்திரன், தவராசா, சட்டத்தரணிகளான சம்பந்தன், துரைராஜசிங்கம், சயந்தன், இவர்களை விட மாவட்ட ரீதியாகப் பல இளம் சட்டத்தரணிகள் உள்ளனர். இவர்கள் மாத்திரமன்றி பல பேராசிரியர்கள், வைத்தியர்கள், பொறியியலாளர்கள், இதர பல கல்வியாளர்கள் எனப் பல்வேறு துறை சார்ந்த புத்திஜீவிகள் என்று எந்தத் தமிழ்க் கட்சியிலும் இல்லாத அளவுக்குத் தமிழரசுக் கட்சியில் அங்கம் வகித்தனர். காரணம் வடக்குக் கிழக்கை ஓரளவுக்கேனும் பிரதிநிதித்துவப் படுத்தியது தமிழரசுக் கட்சி தான் என்பதுதான். எனினும் அதில் எவருக்கும் இரு கருத்து நிலை இல்லை.

ஆனால், இத்தனை பட்டம் பெற்றவர்கள் இருந்தும் என்ன பயன்? ஒரு கட்சியோ அல்லது அமைப்போ, குடும்பமோ, வணிகமோ எதற்கும் மிகவும் அடித்தளமாக விளங்குவது யாப்பு ரீதியான இருப்பியல் கோட்பாடே.

# சமஷ்டியை நீக்கிய தமிழரசுக் கட்சி

**தொடர்ச்சி▲**

அதில் ஆட்டம் கண்டால் யாவும் அசைந்துவிடும்.

ஆகவே இன்றைய தடுமாற்றத்திற்குக் கறுப்பு கோட்டு போட்ட எல்லா சட்டம்பிகளும் பொறுப்புக்கூற வேண்டும்.

தமிழரசுக் கட்சியின் மறுபெயர் 'சமஷ்டிக் கட்சியே'. ஆனால் அந்தச் சொல்லையே நீக்கிவிட்டு, அதைச் சட்டப்படி தேர்தல் திணைக்களத்தில் வழங்கிவிட்டு, வெளியே தெரியாத படி மறைத்தும் வைத்துள்ளனர். இது மிகப் பெரிய ஏமாற்று நாடகம். எதுவும் அறியாத வாக்காளர்கள் இவர்களின் உணர்ச்சிவசத் தேர்தல் பேச்சை நம்பிக் கண்ணை மூடிக்கொண்டு வாக்க ளிக்கிறார்கள். இவ்விதமான ஏமாற்றுக்கள் எல்லாம் அவர்களுக்கு மட்டுமல்ல, கட்சியில் பதவியில் உள்ள பலருக்கும் புரிவதில்லை. அவர்கள் புரிய முயல்வதும் இல்லை.

இப்போது மட்டுமல்ல, இவர்கள் ஏலவே கூட, இப்படி பல முன்னுக்குப் பின் முரணாக நடந்து கொள்வது வாடிக்கைதான். 1977இல் தமிழர் விடுதலைக் கூட்டணியாக தேர்தலை சந்தித்த போது தமிழரசின் தளபதியாக இவர்களின் ஆதர்ச நாயகனாக அக் காலத்தில் விளங்கிய அமிர்தலிங்கம் மட்டக்களப்பில் தமிழர் விடுதலைக் கூட்டணியில் இராசதுரையையும், தமிழரசுக் கட்சியில் காசி ஆனந்தனையும் பொதுத் தேர்தலில் களமிறக்கி பல்வேறு குழப்பத்தை ஏற் படுத்தினார்.

தமிழரசுக்கட்சி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆகியன இணைந்து கொள்ளும்போது ஏற்படுத்திக்கொண்ட உடன்பாட்டுக்கு அமைய இ.தொ.கா. வடக்கு, கிழக்கு கோட்பாட்டில் மலையக அரசியல் சாத்தியமில்லை என்று வெளி யேறியது. அது வேறு விடயம். ஆனால், அமிர்தலிங்கம் அத்தேர்தலில் தமிழரசுக் கட்சியையும் தமிழர் விடுதலைக் கூட்டணியையும் களத்தில் இறங்கி தனது மாறுபட்ட நிலையை வெளிப்படுத்தினார். அது மட்டுமல்ல, குமார் பொன்னம்பலம் அத்தேர்தலில் யாழ்ப்பாணத் தொகு தியைக் கேட்க, இல்லை நீங்கள் ஏலவே வெற்றி பெற்ற வட்டுக்கோட்டை தொகுதி தரலாம் என அடம்பிடித்து, அவர்கள் வெளியேறும் நிலையை தோற்றுவித்தார் அமிர்தலிங்கம்.

அது மட்டுமல்ல அவர்களது கட்சி சின்னம் கூட அச்சமயத்தில் இரத்தாகியிருந்ததுஃஅதனால் அவர்கள் அத்தேர்தலை சுயேட்சையாக – மரம் சின்னத்தில் – எதிர் கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. தங்களின் கட்சிப் பதிவு நீக்கத்திற்கு அமிர்தலிங்கத்தின் சூழ்ச்சியே காரணம் என்று குமார் பொன்னம்பலம் விமர்சனம் செய்தார். பின்னர் ஜே.ஆரின் அனு சரணையில்தான் கட்சியை மீட்டனர் என்றும் கதையுண்டு. அது வேறு விடயம்.

அரசியல் அதிகாரத்தில் இருப்பவர்கள் இவ்விதமான ஏமாற்று வேலைகளை சர்வசாதாரணமாக செய்யத் தயங்குவதில்லை.

தமிழரசுக்கட்சியில் தற்போது பதில் பொதுச் செயலாளராக இருக்கும் மருத்துவர் சத்தியலிங்கம் கூட அப்பதவியை வகிக்க முடியாது என்பதுதான் உண்மை.

விதி 07 பொதுச்சபை (அ). ஒரு துணைப் பொதுச் செயலாளர் என்றே கூறுகின்றது.

2014 ஆண்டு நடந்த கட்சியின் 15 ஆவது தேசிய மாநாட்டில் இருந்து துணைப் பொதுச் செயலாளராக நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தொடர்கிறார். சத்தியலிங்கம் 2017 இல் நடைபெற்ற 16ஆவது தேசிய மாநாட்டில் தான் அவரும் இரண்டாவது துணைப்



பொதுச் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டார். யாப்பின் படி இரண்டு துணைப் பொதுச் செயலாளர்கள் பதவி வகிக்க முடியாது.

ஆகவே, அதன் தொடர்ச்சியாக இந்த இடைக் காலத்தில் பதில் பொதுச் செயலாளராக அவர் பணியாற்றியமை சரியா, அதைத் தேர்தல் ஆணையம் எப்படி ஏற்றுக்கொண்டது என்ற பல கேள்விகள் எழலாம். அப்படியே அது தவறு என்றால், அவரால் இதுவரை மேற்கொள்ளப்பட்ட சகல நடவடிக்கைகளும் கேள்விக் குள்ளாகும். இவை எல்லாம் மாவை சேனாதிராஜாவின் தான்தோன்றித்தனமான செயற்பாடுகளே. கட்சியின் எழுதப்படாத மரபை மீறி, பத்து ஆண்டுகள் தலைவராக இருந்து, அவர் சாதித்தவை என்ன? கட்சியின் தாபகர் தந்தை செல்வநாயகம் கூட இரண்டு தடவைகளில் விலகி செயலாளராகக் கூட இருந்தார். தமிழரசுக் கட்சியின் சவப்பெட்டிக்கு சேனாதிராஜாதான் இறுதி ஆணி அடிப்பார் என அமிர்தலிங்கத்தின் துணைவியார் மங்கையர்கரசி அமிர்தலிங்கம் இறப்பதற்கு சில காலத்திற்கு முன்னர் ஓர் ஊடகத்திற்குக் கருத்து தெரிவித்திருந்தார்.

அதை மெய்ப்பிக்கும் வகையில் தான் அண்மைய நகர்வுகள் உள்ளன

ஆகவே கட்சிக்குள் போட்டி வருகிற போதே பிரிவு அல்லது பிளவு ஏற்பட வாய்ப்பு உண்டு என்பது வழமைதான். அதை அறிவாற்றல் மூலம் தந்திரோபா யமாக தற்காத்துக் கொள்வதற்கான சிறந்த உத்திகளைப் பயன்படுத்த வேண்டியதே தலைமையின் ஆளுமை. வெளிப்பாடு. இங்கு ஏட்டிக்குப் போட்டி அரசியலே நகர்கிறது. மிகவும் பலவீனமான நிலையில் உள்ள தமிழினத்தின் எதிர்கால இருப்புப் பற்றி எவருக்கும் கிஞ்சித்தும் கவலையிருப்பதாகத் தெரி யவில்லை.

ஆகவே நடந்த தவறை ஏற்றுக் கொண்டு, கட்சி யினதும் தமிழினத்தினதும் எதிர்காலத்தை எண்ணி, நீதிமன்றில் இருந்து விடுவித்துக் கொள்வதே சிறந்த தலைமைக்கு அடையாளம். இல்லையேல் வரலாறு இவர்களை ஒரு போதும் மன்னிக்காது.

'சிரித்திரன்' ஆசிரியரின் கேள்வி பதில்தான் நினைவுக்கு வருகிறது. 'சித்திரையில் புத்திரன் பிறந்தால் அக்குடி கெடுமாமே?' என்று ஒருவர் கேள்வி கேட் டிருந்தார். அதற்குப் பதிலாக இப்படி கேட்டார் 'சிரித்திரன்' ஆசிரியர்:– 'அப்படியானால் நம் தமிழ்த் தலைவர்கள் சித்திரையிலா பிறந்தார்கள்?'– என்று. அளவானவர்கள் அணிந்து கொள்ளுங்கள். அறிய வேண்டியவர்கள் அளந்து கொள்ளுங்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 22.02.2024




பொறுமையான அணுகுமுறை தேவை. திட்டமிட்டு செயலாற்ற வேண்டும். உறுதியான அணுகுமுறை தேவை.

பணியிடச் சூழல் அவ்வளவு சிறப்பாக இருக்காது. பணியில் தாமதங்கள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புள்ளது. மகிழ்ச்சியை தக்க வைக்க உங்கள் துணையுடன் அனுசரித்து செல்ல வேண்டும்.

பயணத்தின் போது பண இழப்புகள் நேரலாம். எனவே கவனமாக இருக்க வேண்டும்.

கால் வலியால் அவதிப்பட நேரலாம். தியானம் அல்லது யோகா மேற்கொள்வது நல்லது.




இன்று உங்களுக்கு உற்சாகமான மகிழ்சிகரமான நாள். இன்றைய தினத்தை கொண்டாடி மகிழ்வீர்கள். இது உங்களுக்கு மிகுந்த திருப்தி அளிக்கும்.உங்கள் விருப்பங்களை திருப்திகரமாக நிறைவேற்றும் நாள்.

பணியில் அதிக வாய்ப்புகள் காணப்படுகின்றன. நீங்கள் திருப்தியாக உணர்வீர்கள். இன்று கிடைக்கும் புதிய வாய்ப்புகள் உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும்.

உங்களின் கருத்துக்களை உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக பகிர்ந்துகொள்வீர்கள். இதனால் ஒருவரையொருவர் நன்கு புரிந்துகொள்வீர்கள்.

நிதியைப் பொறுத்தவரை இன்று திருப்திகரமாக இருக்கும். இன்று நீங்கள் பணம் சேமிப்பீர்கள்.உங்கள் சேமிக்கும் ஆற்றல் அதிகரிக்கும்.உங்களை வருத்திக்கொள் ளாமல் இருந்தால் இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும்.




இன்றைய நாளை முன்கூட்டியே திட்டமிட்டு அதன்படி நடந்து கொள்ள வேண்டும். முக்கியமான முடிவுகளை இன்று எடுப்பதை தவிர்க்கவும். அதனால் சில பிரச்சினைகள் ஏற்படும். எனவே சிறிது கவனமுடன் இருக்க வேண்டும்.

இன்று சாதகமான பலன்களைப் பெற அதிக முயற்சிகள் எடுக்க வேண்டும். இன்று சிறப்பான நாளாக அமையாது. இன்று பணிச்சுமை காணப்படும்.

நீங்கள் பொறுமை இழந்து காணப்படுவீர்கள். இதனை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இன்று பொறுமையாக இருக்க வேண்டியது அவசியம்.

இன்று பணபுழக்கம் போதுமானதாக இருக்காது. தேவையற்ற செலவினங்கள் அதிகமாக இருக்கும்.

முதுகு மற்றும் மூட்டுக்களில் விறைப்பு காணப்படும். உடற்பயிற்சி மற்றும் தியானம் மேற்கொள்வது நல்லது.




இன்று உங்களுக்கு சாதகமான நாள் அல்ல. பலன்கள் தாமதமாகக் கிடைக்கும். அதிகம் எதிர்பார்க்காதீர்கள். பிரார்த்தனையில் உங்களை ஈடுபடுத்திக் கொள்வது உங்களுக்கு ஆறுதலை அளிக்கும்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். உங்கள் பணிகளை சிறப்பாக திட்டமிடுங்கள்.

உங்கள் மனதில் காணப்படும் பதட்டத்தை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இதனை தவிர்த்தல் நலம். உங்களை அமைதியாக வைத்திருங்கள்.

உங்கள் மதிப்பு மிக்க உடைமைகளை பத்திரமாக வையுங்கள். இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. நீங்கள் பணத்தை இழக்க நேரலாம்.

தோல் சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்படலாம். எண்ணெய் பதார்த்தங்களை தவிர்ப்பது நல்லது.




இன்று உங்களிடம் பாதுகாப்பின்மை உணர்வு காணப்படும். இன்று அவ்வளவு சிறப்பான நாளாக அமையாது. உங்கள் வளர்ச்சி குறித்துக் கவலைப்படுவீர்கள். இன்று அதிர்ஷ்டம் குறைந்து காணப்படும்.

இன்று பணியில் உங்களிடம் பொறுமை காணப்படாது. இதனால் தவறுகள் நேரலாம். மனதை நிலைப்படுத்தி பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். நீங்கள் அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்க வேண்டும்.இன்று பண இழப்பு காணப்படுகின்றது. நீங்கள் கடன் வாங்க நேரலாம். சிறந்த முறையில் பணத்தை நிர்வகிக்க முயலுங்கள்.

தொண்டை எரிச்சல் மற்றும் தலைவலி ஏற்பட வாய்ப்பு உள்ளது. குளிர்ச்சியான நீரைப் பருக வேண்டாம்.




இன்று உங்களின் சொந்த முயற்சி மூலம் வளர்ச்சி காணப்படுகின்றது. வெற்றி நிச்சயம்.

பணியிடத்தில் பதவி உயர்வுக்கான வாய்ப்பு உள்ளது. உங்கள் கடின உழைப்பு பாராட்டைப் பெறும். உங்கள் பணியின் தரத்தை மேம்படுத்துவீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை கொண்டிருப்பீர்கள். இதனால் உங்கள் அன்பு அதிகரிக்கும்.

நிதிநிலைமை சிறப்பாக காணப்படுகின்றது. இன்று பணத்தை சுதந்திரமாக கையாள்வீர்கள்.

இன்று உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக சிறந்த ஆரோக்கியம் காணப்படும்.




இன்று சுறுசுறுப்பான மன நிலையில் காணப்படுவீர்கள். மிகுந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள். சுய வளர்ச்சிப் பாதையில் செல்வீர்கள். உங்களிடம் மாற்றம் உணர்வீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

பணியில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள். இதற்கு உங்களிடம் காணப்படும் தன்னம்பிக்கையே காரணம்.

உங்கள் துணையுடன் சுமுகமாகப் பழகுவீர்கள். உங்கள் அனுசரனையான அணுகுமுறை அவரை மகிழ்விக்கும். உறவில் பிணைப்பு வலுப்படும்.

நிதிநிலைமை முன்னேற்றகரமாக காணப்படும். உங்கள் சேமிப்பை அதிகரிப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் தைரியம் மற்றும் உறுதி காரணமாக நீங்கள் மிகவும் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.




உங்களின் சொந்த முயற்சி மூலம் இன்று நீங்கள் அபாரமான வளர்ச்சி காண்பீர்கள்.

பணியிடத்தில் பதவி உயர்வு கிடைக்கலாம். இன்று அர்ப்பணிப்புடன் பணி புரிவீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவு கொண்டிருப்பீர்கள். உங்கள் அணுகுமுறை மூலம் அவரின் இதயத்தில் இடம் பிடிப்பீர்கள்.

நிதி நிலைமையில் முன்னேற்றம் கானப்படும். வங்கியிருப்பை நல்ல முறையில் பராமரிப்பீர்கள். திருப்தி நிலவும்.

சாதரணமான அணுகுமுறை மூலம் ஆற்றல் அதிகரிக்கும். அதன் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 22.02.2024




இன்று சிறிது சோம்பலுடன் காணப் படுவீர்கள். மனதில் குழப்பம் காணப் படும். இன்றைய நாளை உங்களுக்கு சாதகமாக்கிக் கொள்ள இத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் நலம்.

இன்று முழுவதும் பணியில் முழுகியி ருப்பீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்காது.

இன்று உங்கள் இருவரிடையே காணப்படும் மனக் குழப்பம் காரணமாக உங்கள் துணையுடன் சுமுகமான உறவு காணப்படாது. எனவே குழப்பத்தை தவிர்த்து தெளிவான எண்ணங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும். பணத்தை கவனமாகக் கையாள வேண்டும். அஜாக்கிரதை காரணமாக பணத்தை இழக்க நேரலாம்.

கண்களில் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளதால் கவனமாக இருக்க வேண்டும்.




இன்று சிறந்த அதிர்ஷ்டம் காணப் படும். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். உங்கள் அணுகுமுறையில் வளைந்து கொடுக்கும் போக்கு காணப் படும்.

உங்கள் சக பணியாளர்கள் மற்றும் மேலதிகாரிகளுடன் விருந்தில் கலந்து கொள்வீர்கள். அவர்களுடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள்.

இன்று உங்கள் துணையிடம் காதல் உணர்வை வெளிபடுத்துவீர்கள். இதனால் உங்கள் பிரியமானவரிடத்தில் அன்பு அதிகரிக்கும்.

இன்று பணவரவிற்கான வாய்ப்பு உள்ளது. பங்கு வர்த்தகத்தின் மூலம் பணம் சம்பாதிப்பீர்கள்.

இன்று அதிக ஆற்றலுடனும் உறுதியுடனும் காணப் படுவீர்கள். ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று மகிழ்ச்சியான நாள். இன் றைய செயல்களின் விளைவுகள் உங்க ளுக்கு சாதகமாக அமையும். கடினமான பணிகளையும் இன்று எளிதாகச் செய்வீர்கள். உங்கள் விருப்பங்கள் நிறைவேறுவதற்கான வாய்ப்பு உள்ளது.

மேலதிகாரிகளின் பாராட்டுகள் குவிந்து கொண்டே இருக்கும். பணிகளை குறித்த நேரத்திற்கு முன்பே தரமாக முடித்துத் தருவீர்கள்.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள்.இது நல்ல புரிந்துணர்வை ஏற் படுத்தும். எதிர்பாராத பண வரவுகள் காணப்படும். நீங்கள் ஆச்சரியப்படும் அளவில் உங்கள் வருமானம் அதிகரிக்கும். மகிழ்ச்சி நிலவும். உங்களிடம் காணப்படும் தைரியம் மற்றும் உறுதி காரணமாக இன்று முழு ஆரோக்கியத்துடன் திடமாக காணப்படுவீர்கள்.




நீங்கள் உறுதியுடன் இருக்க வேண்டும். கவனமுடன் செயலாற்ற வேண்டும். தைரியமாகவும் துணிவா கவும் இருக்க முயல வேண்டும்.

பணிச்சுமை காரணமாக உங்கள் மேலதிகாரிகள் மற்றும் கீழ் பணிபுரி பவர்களுடன் சில விரும்பத் தாகாத தருணங்களைச் சந்திக்க வேண்டியிருக்கும்.

உங்கள் துணையுடன் சில அசௌகரியமான உணர் வுகளை எதிர்கொள்வீர்கள். மகிழ்ச்சியை தக்க வைக்க அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பணப்புழக்கம் போதுமானதாக இருக்காது. குடும்ப பொறுப்புகள் காரணமாக செலவுகள் காணப்படும்.

தேவையற்ற கவலைகளுக்கு ஆளாவீர்கள். இதனால் பதற்றமும் தலைவலியும் ஏற்படும்.








# உண்மை, நல்லிணக்க ஆணைக்குழு சட்டமூலத்திற்கு மல்வத்து, அஸ்கிரிய பீட மகா சங்கத்தினர் பாராட்டு

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சட்டமூலத்திற்கு மல்வத்து, அஸ்கிரிய பீட மகா சங்கத்தினர் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறையின் இடைக்கால செயலகத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி அசங்க குணவன்ச உள்ளிட்ட அதிகாரிகள், உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சட்டமூலத்தின் பிரதியொன்றை மல்வத்து அஸ்கிரி மகா மகாநாயக்க தேரர்களிடம் கையளித்துள்ளனர்.

இந்தச் சட்டமூலத்திற்குப் பாராட்டு தெரிவித்த மல்வத்து பீட மகாநாயக்கர் திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல தேரர் மற்றும் அஸ்கிரியத் தரப்புப் மகா நாயக்கர் வரக்காகொட ஸ்ரீ ஞானரதன தேரர் ஆகியோர் இதனை மேலும் பரிசீலனை செய்து பொது நிலைப் பாட்டை அறிவிக்கவும் இணக்கம் தெரிவித்தனர்.

உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறையின் இடைக்கால செயலகச் செயற்பாட்டின் முன்னேற்றம் குறித்து அதிகாரிகள் மேலும் மகாநாயக்க தேரர்களுக்கு விளக்கமளித்தனர்.

இந்த நிகழ்வில் கலாநிதி மகவெல ரதனபால தேரர், கலாநிதி முருத் தெனியே தர்மரதன தேரர் மற்றும் உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறை இடைக்கால செயலகத்தின் பிரிவு தலைவர் சி. வை. தங்கராஜா, மக்கள் தொடர்பு நிறைவேற்று அதிகாரி தனுஷி டி சில்வா, சிரேஷ்ட சட்ட நிறைவேற்று அதிகாரிகளான யஸ்மதா லொகுனாரங்கொட, துலான் தசநாயக்க, இணைப்பாளர் எஸ். டி. கொத்தலாவல ஆகியோரும் கலந்துகொண்டனர்.



